யாழ்நகரில்
தரமான
A/L
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ.2/-

A/L 88
விஞ்ஞான
வகுப்புக்கள்
Ia, IIa பிரிவுகள்
நடைபெறுகின்றன
IIIa பிரிவு
ஆரம்பமாகின்றது
விபரங்கட்கு:
New Master
Institute
B.M C. Lane, JAFFNA.

மலர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 3 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 11 (19 07-1986) SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY இதழ்: 26

## கருத்துக் கலசம்

### கிழக்கில் தமிழ்

மட்டக்களப்புப் பல்கலைக்கழக வளாகம் பூரணத்துவமான பல்கலைக்கழகமாக மாற விருக்கிறது. எதிர் வரும் அக்டோபர் மாதத்தில் அது இலங்கைப் பல்கலைக்கழக மாகப் பரிணமிக்கப் போகிறது. அந்தச் செய்தி ஈழத்தமிழ் மக்களுக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது.

வடக்கில் ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறது. கிழக்கிலும் ஒன்று உருவாகுவதால் தமிழ் பிரதேசங்களில் இரண்டு பல்கலைக்கழகங்கள் எனப் பலரும் பூரித்தனர்.

கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு அது ஒரு தூணாக விளங்கும் என எதிர்பார்த்தனர்.

ஆனால் இடையில் வந்த செய்தி இடி விழுந்ததுபோல் உறுத்துகிறது. தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் அமையவிருக்கும் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை இருக்கமாட்டாது என்பதே அந்தச் செய்தி.

இந்தப் புறக்கணிப்புக்கும், பெருந்தேசிய வாதத்தின் பின்னணியில் திட்டமிட்டு வருகின்ற அரசாங்கத்தின் சம்பந்தம் உண்டோ என நாம் ஐயுறுகிறோம்.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம். ஆனால் அந்தப் பெருண்மையை ஏற்கவும் அங்கீகரிக்கவும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மறுக்கின்றனர்.

முழு இலங்கையையும் சிங்களவர் பிரதேசமாக்கச் சதி நடந்து கொண்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்தைத் தமிழ்ப் பகுதி என்று உரிமை கொண்டாடாமல் செய்ய வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணும் முயற்சியிலும் வடக்கு - கிழக்கை தமிழர் தாயகமாகக் கொண்டு ஆற்றை இணைப்பதற்கு சிங்களப் பேரினவாதிகள் விரும்பவில்லை.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையைத் தொடங்காது விடுவதும் அதன் பிரதிபலிப்பே என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

மேற்கிலும் தெற்கிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் எல்லாம் சிங்களத் துறைகள் இருக்குமானால் கிழக்கிலங்கையில் தமிழ்த் துறையை ஆரம்பிக்கத் தயக்கம் ஏன்?

தமிழ்த்துறை இல்லாத கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம், பண்பாட்டுப் பாலைவனமாகிவிடும் என்பது உண்மை.

கிழக்கிலங்கையைச் சேர்ந்த இரண்டு தமிழர்கள் மூழு மந்திரிகளாக ஆசனங்களை அலங்கரிக்கிறார்கள். இந்த விடயத்திலாவது அரசாங்கத்துடன் போராடி வெற்றி பெறத் திராணி இல்லாதவர்களா அவர்கள்?

# கப்பல்கள் விமானங்கள் சிப்பாய்கள்!

## நேற்று வடக்கே விரைவு

யாழ்ப்பாணம், ஜூலை 19

நேற்று அதிகாலை யாழ் குடாநாட்டிற்கு மேலதிகமாக நவீன ரக குண்டுவீச்சு விமானங்கள் இரண்டும், நவீனரகப் பீரங்கிக் கப்பல்கள் மூன்றும் வடக்கிற்கு வந்து சேர்ந்தன. பெரும் எண்ணிக்கையான சிப்பாய்களும் நேற்று இங்கு வந்து சேர்ந்தனர்.

நேற்று சுமார் ஐநூறு சிப்பாய்கள் காரைநகர், காங்கேசன் கடல் பகுதிகளூடாக காரைநகர், பலாலி முகாம்களுக்கு வந்து சேர்ந்தனர் என்று அறியவந்துள்ளது.

பலாலி விமான நிலையத்திற்கு இரண்டு நவீன ரக குண்டுவீச்சு விமானங்கள் வந்து சேர்ந்தன.

இதேவேளை வவுனியாவிலிருந்து 20 இராணுவ லொறிகள். 8 வொறிகள், ட்ரக்குகளில் சுமார் அறுநூறு சிப்பாய்கள் நேற்று கிளிநொச்சி இராணுவ முகாமை வந்தடைந்தனர். (உ-6)

## கூட்டணி - அரசு மீண்டும் திங்கள் பேச்சு

கொழும்பு, ஜூலை 19

அரசு—கூட்டணி பேச்சுக்கள் மீண்டும் நாளை மறுநாள் திங்கட்கிழமை காலையும் மாலையும் இடம்பெறும்.

இதனிடையில் இன்றும் நாளையும் பல்வேறு அமைப்புக்களின் தூதுக்குழுக்கள், அரசியல் கட்சித் தூதுக்குழுக்கள் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்துப் பேச உள்ளன.

ஞாயிறு பகல் இரண்டு முஸ்லிம் அமைப்புக்கள் கூட்டணித் தலைவர்களைச் சந்திக்கும்.

ஞாயிறு இரவு சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்திக்கக் கூட்டணித் தலைவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். (அ-எ)

### இந்தியா கண்டனம்

கொழும்பு, ஜூலை 19

இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுக்கள் நடந்துவரும் வேளையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை எதிர்த்து இந்திய அரசு இலங்கை அரசிடம் கண்டனமும் கவலையும் தெரிவித்திருக்கிறது.

இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் மூலம் இது தெரிவிக்கப்பட்டது. (உ)

### பஸ் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 19

வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் இன்று சேவையில் ஈடுபடமாட்டா.

வியாழக்கிழமை நெடுங்கேணியில் நடந்த ஹெலிகொப்டர் தாக்குதலில் அகால மரணமடைந்த பஸ் சாரதி இம்மனுவலுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாகவே இன்று சேவைகள் நிறுத்தப்படுகின்றன.

இதேவேளை இவரது சடலம் நேற்று விசேஷ பஸ் மூலம் பாஷையூரில் உள்ள இவரது இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இவரது இறுதிச் சடங்குகள் இன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறும். (இ-10)

# தமிழருக்கு தாயகம்: நிராகரிப்பு!

## அ. க. மாநாட்டில் அறிக்கை மூலம் விவரிப்பு

கொழும்பு, ஜூலை 19

தமிழரின் பாரம்பரைப் பிரதேசம் என்ற தத்துவம் நிராகரிக்கப்படவேண்டும்; இலங்கை அனைத்து இனங்களுக்கும் சொந்தம்.

பொது விஷயங்கள் குறித்து இரண்டு மாகாணசபைகள் கலந்துரையாட விரும்பினால் இரண்டு சபைகளின் முதல் அமைச்சர்களும் சந்தித்துப் பேசும் ஒழுங்குகளை ஜனாதிபதி மேற்கொள்வார்.

இப்படி மாகாணசபை சம்பந்தமாக ஆராய்ந்த குழு, நேற்று ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நேற்று மீண்டும் முழு அளவிலான அரசியல் கட்சிகளின் மாநாடு நடந்தபோது ஐந்து குழுக்களும் தமது அறிக்கைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தன.

அறிக்கைகளின் பிரதிகள் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளிடம் வழங்கப்பட்டன.

அமைச்சர் சாஹுல் ஹமீது தலைமையிலான மாகாணசபைகள் சம்பந்தமாக ஆராய்ந்த குழு பின்வரும் சிபார்சுகளைச் செய்துள்ளது.

மாகாண மட்டத்திலேயே மாகாண சபை அமைக்கப்படவேண்டும்.

சபை அமைக்கப் பட்டவுடன் உடனடியாகத் தேர்தல் விகிதாசார முறையில் நடத்தப்பட வேண்டும்.

காணி அதிகாரம் சம்பந்தமான குழு, தனது அறிக்கையில்,

'மாகாணங்களுக்கு இடையேயான காணிக் குடியமர்த்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசுக்குரியது - என்று தெரிவித்துள்ளது.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு -

தேசிய கல்விக் கொள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### மீனவர்கள் திரும்பினர்

ராமேஸ்வரம், ஜூலை 18

இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 9 இந்திய மீனவர்களின் அஸ்தியுடன், உயிர் தப்பிய ஐந்து இந்திய மீனவர்கள் ராமேஸ்வரம் திரும்பினர்.

இறந்த மீனவர்களின் சடலங்களை புங்குடுதீவில் தகனம் செய்துவிட்டு 5 மீனவர்களும் அஸ்தியுடன் வந்ததாக 'இந்து' செய்தி வெளியிட்டது. (உ-எ-2)

### போராளிகள் ஊழியரை திருப்பி அனுப்பினர்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ் தொலைத்தொடர்பு ஊழியர்கள் நேற்று கடமைக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. போராளிகள் இவர்களைத் திருப்பி அனுப்பினர்.

கடந்த இரண்டு தினங்களாக தொலைத்தொடர்பு நிலைய ஊழியர்கள் கடமைக்குச் சென்று வந்தனர்.

எனினும் நேற்று முன்தினம் இப்பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக நேற்று கடமைக்குச் சென்ற ஊழியர்களை போராளிகள் பஸ்ஸிலேயே வைத்து திருப்பி அனுப்பினர். (இ-10)

### மொட்டைத் தண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை 19

தூர்நடத்தையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர் ஒருவர் நேற்று இளைஞர் கோஷ்டி ஒன்றினால் மொட்டையடிக்கப்பட்டு யாழ் பஸ் நிலையத்தில் மின்கம்பம் ஒன்றுடன் கட்டப்பட்டிருந்தார்.

### மீண்டும் ஆரம்பம்

கோப்பாய்—கைதடி ஊடாக பிரயாணம் தற்போது ஆரம்பமாகியுள்ளது.

குண்டினால் தகர்க்கப்பட்ட பகுதி தண்டவாளத்தினால் மூடப்பட்டதனூடாக மினிபஸ்கள் செல்கின்றன.

ஆனால் குறிப்பிட்ட பகுதியில் பிரயாணிகள் இறங்கி நடந்து சென்றே பின்னர் தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். (இ-74)

### தேசிய சின்னத்தில் மாற்றம்?

வான்கூவர், ஜூலை 18

கனடா நாட்டின் வான்கூவரில் நடைபெறும் 'எக்ஸ்போ — 1986' கண்காட்சியில் இலங்கைப் பிரிவில் தேசியக் கொடியில் காணப்படும் சிங்கம் வாளேந்திய வண்ணம் சித்திரிக்கப்படவில்லை. மலர்களை ஏந்திய வண்ணமே சிங்கம் காணப்படுகிறது.

இது குறித்து அங்குள்ள சிங்கள சமூகத்தலைவர் அசோகா வீரசிங்க கவலை தெரிவித்து அரசுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழர்களை இது திருப்திப்படுத்தும் செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-எ-2)

## சுபநேரம்

19—07—1986
சனிக்கிழமை

சுபநேரம்:
5-01 முதல் 4-31 வரை
ராகுகாலம்:-
9 01 முதல் 10-31 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சனிப்பிரதோஷ விரதம்

## மாகாண சபைகளை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

மாகாணசபை யோசனையை எதிர்த்து நேற்று யாழ் பல்கலைக்கழக மாணவர் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் கலாசாலை வீதி, பிறவுண் வீதி, ஆடியபாதம் வீதி, பலாலிவீதி ஊடாகச் சென்று மீண்டும் பல்கலைக்கழகத்தை அடைந்தது.

மாகாணசபைக்கு எதிரான சுலோகங்களும் இந்த ஊர்வலத்தில் கொண்டுசெல்லப்பட்டன.

அண்மையில் அடம்பன், திருமலை, மூதூர் நெடுங்கேணி பகுதிகளில் நடந்த கொலைச் சம்பவங்களைக் கண்டித்தும் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஊர்வலத்திற்குமுன்னர் பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். (இ-10)

## கதவுகள், ஜன்னல்கள் விறகுகளாகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 19

பலாலி முகாமைச் சுற்றியுள்ள வயாவிளான், பலாலி, கட்டுவன் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்களின் வீடுகளிலிருந்து கதவுகள், ஜன்னல்கள் என்பன சிருடையினரால் பெயர்த்து எடுத்துச் செல்லப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

விமானம் மூலம் விறகு கொண்டுவரும் கஷ்டத்தினாலேயே இவ்வாறு சீருடையினர் செய்வதாகத் தெரியவருகிறது. (உ-5)

## "அ.க மாநாடு குறித்து எங்களுக்கு அக்கறையில்லை"

கொழும்பு, ஜூலை 19

எமக்கும் அரசுக்கும் இடையேதான் நேரடிப் பேச்சுவார்த்தை இடம்பெறுகின்றது.

அரசியல் கட்சிகள் மாநாடு பற்றி எமக்கு அக்கறை இல்லை.

இப்படிச் சொன்னார் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம்.

அரசியல் கட்சிகள் மாநாட்டில் நியமிக்கப்பட்ட குழு, தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்ற தத்துவத்தை நிராகரிக்கச் சிபார்சு செய்துள்ளதே என்று சொன்னபோதே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்ட விளக்கத்தைத் தெரிவித்தார்.

பேச்சுக்களில் முன்னேற்றம் உண்டா? — என்று கேட்டபோது,

தீர்க்கமான முடிவுகள் வராத நிலையில் எப்படி முன்னேற்றம் உண்டு, இல்லை என்று கூறுவது?— இப்படித் திருப்பிக் கேட்டார் திரு. அமிர்தலிங்கம். (அ-எ)

## 20 ஊர்காவலர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 19

நெடுங்கேணி டொலர் பாம் முகாமிலிருந்து டிராக்டர் ஒன்றில் தெனியாயவை நோக்கிப் புறப்பட்ட 20 ஊர்காவல் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் உயிரிழந்தனர்.

ஊர்காவல் படையினர் புறப்பட்ட டிராக்டர் முகாமிலிருந்து 800 யார் தூரத்தில் தாக்குதலுக்கு இலக்கானது.

—இப்படி புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## கந்தளாயில் 10 பேர் சுட்டுக்கொலை

திருகோணமலை, ஜூலை 19

கந்தளாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் (வியாழன்) இரவு ஏழு சிங்களவர்கள் மூன்று முஸ்லிம்கள் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கந்தளாய்ச் சீனித் தொழிற்சாலையில் இருந்து 4 மைல் தொலைவிலுள்ள 6 ஆம் கண்டம் எனும் இடத்தில் சிங்களவர் வாழ்ந்து வருகின்றனர்.

ஆயுதங்களுடன் அப்பகுதிக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் வீடுகளினுள் இருந்தவர்களை வெளியே அழைத்துச் சுட்டனர்.

இச்சம்பவத்தில் 10 பேர் வரை இறந்தனர். மரண விசாரணை நடத்துவதற்காக திருகோணமலை பதில் நீதிவான் திரு. எம். கே. செல்லராசா ஹெலிகொப்டர் மூலம் கந்தளாய்க்கு நேற்று நண்பகல் சென்று மரண விசாரணை நடத்தினார்.

கொலைச் சம்பவம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (உ-எ-150)

## கடற்படையினர் மீது நேற்று தாக்குதல்

### காரைநகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

காரைநகரில் நேற்று கடற்படையினர் மீது போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

நேற்று மாலை மூன்று மணியளவில் காரைநகர் கடற்படை முகாமில் இருந்து இரண்டு பிரவேசப் படகுகளில் கடற்படையினர் ஊர்காவற்துறைக் கரையை நோக்கி வந்ததாகவும் அவர்களை நோக்கிப் போராளிகள் மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்பட்டது.

இதில் ஒரு படகு சேதமானதாகவும், பல கடற்படையினர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின்போது போராளி ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிய வருகிறது. (உ-10)

## வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

ஞாயிறவுக்கு அப்பால் செல்லும் லொறி, பஸ் உரிமையாளர்கள் அனைவரையும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாண ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறும் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ளுமாறு வட பிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கமும், யாழ் முஸ்லிம் போக்குவரத்துச் சங்கமும் கோரிக்கை விடுத்துள்ளன.

போக்குவரத்து விடயங்கள் குறித்து யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரியுடன் பேசிய விடயங்கள் குறித்து கலந்தாலோசிப்பதற்கே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (உ)

## மற்றும் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

நெடுங்கேணிச் சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தோரில் ஒருவர் நேற்று மரணமானார்.

ஜோதிபாலன் (38 வயது) என்பவரே மரணமானவராவார். (இ-10)

## 10 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 19

மட்டக்களப்பு உன்னிச்சைப் பகுதியில் நேற்று ரோந்து சென்ற சிப்பாய்கள் பொதுமக்களில் பத்துப் பேரை கைது செய்து தம்முடன் அழைத்துச் சென்றனர்.

நேற்று நண்பகல் இப்பகுதியால் ரோந்து சென்ற சிப்பாய்கள் வீதியில் சென்ற பொதுமக்களைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## முகாம் முற்றுகை முயற்சி முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

புதன் முல்லைத்தீவு, நெடுங்கேணியில் புலிகள் முகாம் ஒன்றை முற்றுகையிட இராணுவம் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

300க்கும் அதிகமான சிப்பாய்களை எதிர்த்து ஐந்து மணி நேரம் இடம்பெற்ற சமரில் இராணுவத் தரப்பில் உயிர்ச்சேதமும் காயங்களும் ஏற்பட்டன.

இதனால் இராணுவம் நிலைகொள்ள முடியாது திரும்பியது.

முகாம் திரும்பிய இராணுவம் பெரியகளம் என்னும் இடத்தில் எமது நிலைகளை நோக்கி சிக்கியதால் இராணுவத் தரப்பில் பாரிய உயிர் இழப்பு ஏற்பட்டது. பலர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த முற்றுகை முறியடிப்பிற்காகவும், மண்ணின் மீட்புக்காகவும் எமது உறுப்பினர்கள் சசி, ராஜ்குமார் ஆகியோர் வீரமரணமடைந்தனர். அவர்களுக்கு வீரவணக்கம்—இப்படி புலிகள் இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## அமிர் சொல்லித்தான் தெரியுமாம்

கொழும்பு, ஜூலை 19

நெடுங்கேணியில் இ.போ.ச பஸ்மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா தன்னிடம் தெரிவித்ததாக கூட்டணிச் செயலதிபர் திரு அமிர்தலிங்கம் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (அ-எ)

## மூதூர் படுகொலை மரண விசாரணை திங்கட்கிழமை

திருகோணமலை, ஜூலை 19

மூதூர்ப் படுகொலையில் இறந்தவர்களின் மரண விசாரணை நாளை மறுநாள் திங்கட்கிழமை நடத்தப்படவுள்ளது.

இச்சம்பவத்தை நேரிற் கண்டவர்களைச் சாட்சியமளிக்க திங்கள் மூதூர் நீதிமன்றத்தில் சமுகமளிக்கும்படி மூதூர் நீதிவான் திரு. என். எதிர்வேலுப்பிள்ளை கேட்டுள்ளார்.

இப்படுகொலையில் 67 தமிழர்கள் வரையில் இறந்தனர் என்பதும் அவர்களில் 39 சடலங்களே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-எ-150)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாங்கவும் விற்கவும்

### விற்பனைக்கு

தாவடி - மானிப்பாய் வீதியில் பத்திரகாளி கோயில் அருகாமையில் 19 பரப்புக் காணி மின்சார வசதியுடன், வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு. விவசாயப் பண்ணை, விலங்குப் பண்ணை, ஆலை அமைப்பதற்கு உகந்தது. அ. ஸ்ரீகரன், 'தோப்பு', சுதுமலை, ஆனைக்கோட்டை.

### தேவை

அரிசிகவடி ஏடுகள் அச்சிடுவதற்கு தொகையாக பனை ஓலைச்சார்வு தேவை. வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும் மில்கவைற்,யாழ்ப்பாணம்.

### தேவை

டாக்டர் வசிப்பதற்கு 3 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. வீடு ஆஸ்பத்திரிக்கு சமீபமாக பலாலி, பருத்தித்துறை, காங்கேசன்துறை வீதியில் அல்லது கண்டுக்குளிப் பகுதியில் அமைந்திருத்தல் வேண்டும். தொடர்பு விளம்பர இல: 27, C/o. உதயன், யாழ்ப்பாணம்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## அடம்பனில் காயமடைந்த மேலும் இருவர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

அடம்பன் பகுதியில் நடைபெற்ற சிறுடையினரின் துப்பாக்கிச் சூட்டின் போது காயமடைந்த மேலும் இருவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் விவரம் வருமாறு:

கைத்தான் இம்மானுவல் (53 வயது) அடம்பன் சர்மலிங்கம் அழகேஸ்வரி (18 வயது) அடம்பன் (இ-10)

### சிரார்த்த தினம்

**திரு மாணிக்கம் பத்மநாதன்**

யாழ்ப்பாணம் மாநகரசபையில் களஞ்சியப் பொறுப்பாளராக இருந்து கடந்த 9 8 1984ல் அகால மரணமாகிய உசனைச் சேர்ந்த திரு மாணிக்கம் பத்மநாதனின் இரண்டாவது சிரார்த்த தினமாகிய இன்று (19 7 86— சனிக்கிழமை) அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி:


திருமதி பரமேஸ்வரி பத்மநாதன்

பிள்ளைகள்:

கோமதி, கோமகன்: ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

N.S. தெய்வேந்திரன்
கோமதி விலாஸ்,
148, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

## சாதனையில் வீழ்வோன் சாகாது வாழ்வோன்!



**கதிரிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**
(வேங்கை மணிமாறன்)
வல்வெட்டித்துறை.

நிலத்தில் உற்பவம்: 15 - 04 - 1954 — நீரில் நற்பதம்; 19 - 06 - 1986

திதி: 19-07-1986

அரேபிய நாட்டில் ஈராண்டுகள் உழைத்தாய்; பிறந்த நாட்டில் கொடுமைகள் கண்டு கொதித்தாய்; இளவலைத் தொடர்ந்து இலட்சியவழி நடந்தாய்; தோழர் இலச்சினையும் சோராத இலட்சியமும் கொண்ட வேங்கையருடன் உனை இணைத்தாய்!

அணியினர் படகோட்டியானாய்; அணிக்கே மெருகூட்டினாய்; கடலை விளையாட்டுத்திடல் என்றுகொண்டு நீ விளைத்த சாதனைகள் ஓயாத கடலுடன் உனக்கிருந்த ஒழியாத போராட்டங்கள் - இன்னுயிரான இலட்சியத்திற்காக உன்னுயிரைப் பணயம் வைத்து நீ செய்த பயணங்கள்— பயணம்... பயணம்... பயணம்... முடிவில் நெடும் பயணம். கடலில் சஞ்சரித்தவன் கடலுடன் சங்கமித்துவிட்டிருக்கிறாய்! கடலின் அலைகள் மட்டுமா ஓய்வதில்லை...? உன் புதுநானூற்றுப் புகழ்க் கதைகளும் தான்!

வெங்களத்தே பதின்மூவருடன் வீழ்ந்தவனே! வீரசொர்க்கம் சேர்ந்தவனே! நகரின் முதல்வர் பிள்ளையாய்ப் பிறந்தாய்!(அல்லை) நகருளோரெல்லாம் அழுதிடப் பிரிந்தாய்!! சமுத்திரக்கடலில் சமரில்பட்டாய்! சாவைப் பெற்றாய்!! சாவே அற்றாய்!!!

இன்று காலை ஊறணி தீர்த்தக் கடற்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரைக் கௌரவிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வண்ணம்,

சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

## வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றத்தினால் தமிழர் தனித்தன்மை மறுப்பு

தமிழர் பிரதேசங்களில் சிங்களவர்களை அரச உதவியுடன் குடியமர்த்தும் திட்டங்கள் கைவிடப்பட வேண்டும். இப்படி இனங்களுக்கு இடையேயான நீதி, சமத்துவத்துக்கான இயக்கம் இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளது. இயக்கத்தின் அறிக்கை இங்கு பிரசுரமாகின்றது.

1930 ஆம் ஆண்டின் பின்னர், இலங்கையில் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் விவசாயக் கொள்கைகளில் முக்கியமான ஒன்றாக இருந்து வருவது வரண்ட பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்து ஆட்களை குடியமர்த்தும் திட்டங்களை உண்டாக்குவதாகும்.

காடுகளை வெட்டி, துப்புரவு செய்து, மக்களைத் தெரிவு செய்து குடியமர்த்தும் வேலைகளை அரசாங்கமே பொறுப்பேற்றுச் செய்து வருகிறது.

1981 வரை பத்துலட்சம் ஏக்கர் வரையான காணிகளில் 4 லட்சத்து 88 ஆயிரம் குடும்பங்கள் வரையில் குடியமர்த்தப்பட்டன.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அதிக குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனர். அரச காணித்திட்டங்களின் நோக்கம் உணவுற்பத்தியைக் கொண்டிருந்தாலும் அரசியல் பின்னணியும் அதற்கு உண்டு.

### தமிழர் பிரதேசங்களில்

இதனால் நடைமுறையில் பாரம்பரியமாகத் தமிழர் வாழ்ந்து வந்த பகுதிகளில் அரசினால் தெரிவுசெய்யப்பட்டு குடியமர்த்தப்பட்டவர்களில் பெரும்பாலோர் சிங்களவரே.

இதற்கு ஆதரவாகப் பின்வரும் காரணங்கள் கூறப்பட்டன:

1. தேசியவருமானத்தில் இருந்து இக்குடியேற்றத் திட்டங்களுக்குச் செலவழிக்கப்படுகிறது. ஆகவே எல்லா மக்களிற்கும் இத்திட்டங்கள் சொந்தமானவை.

தமிழர்கள் குடியமர்த்தப்பட இருக்கவில்லை.

சிங்கள—தமிழ் அரசியல் தலைவர்கள் இது சம்பந்தமான இனப்பிரச்சினைகளை உணர்ந்துள்ளனர்.

இதனால் பரம்பரைத் தமிழர் பிரதேசங்களான மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் இன விகிதாசாரத் தன்மையில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றன. இது தமிழரின் மொழி, கலாச்சாரத் தனித்தன்மைக்கு ஏற்படுத்தப்பட்ட குந்தகமாகக் கருதப்படுகின்றது.

### தமிழரசு மாநாட்டில்

1956 இல் நடந்த தமிழரசுக்கட்சி மாநாட்டில் இது எடுத்துச்சொல்லப்பட்டது.

"தமிழ் பகுதிகளில் உடனடியாகச் சிங்களக் குடியேற்றத் திட்டம் நிறுத்தப்பட வேண்டும்" —இப்படி மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இசரியான பதற்ற நிலைக்கு குடியேற்ற முக்கிய காரணமாக அன்று தொடக்கம் நிலவி வருகின்றது.

இதன் முக்கியத்துவம் 1957 ஜூலையில் உருவான பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் பிரதிபலித்தது.

"காணிகளில் குடியமர்த்தப்படும் ஆட்களைத் தெரிவு செய்யும் உரிமை, திட்டங்களில் வேலைக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் உரிமை பிராந்திய சபைகளுக்கு உண்டு" — என்று அந்த ஒப்பந்தம் கூறியது.

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதும் இது பற்றி வேறு உடன்பாடுகள் ஏற்படவில்லை. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மக்கள் தொடர்ந்து குடியமர்த்தப்பட்டு வந்தனர்.

இது பிரச்சினையை மேலும் இறுக்கியது.

### டட்லி - செல்வா ஒப்பந்தத்தில்

இதன் காரணமாக 1965 மார்ச் மாதத்தில் உருவான சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தில் குடியேற்றம் சம்பந்தமான திட்டவட்டமான விதிகள் சேர்க்கப்பட்டன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகள் கீழ் வரும் முன்னுரிமைப்படி வழங்கப்படும் என்றும் திரு சேனநாயக்கா ஏற்றுக்கொண்டார்:

1. முதலில் மாவட்டத்தில் உள்ள காணியற்றவர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும்.

2. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்

## குடியேற்ற வாசிகள் துணைப்படைகளாகி எல்லையில் இனமோதல் நடக்கும்

3. இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பிரஜைகளுக்கு வழங்கப்பட வேண்டும்; அப்போது தமிழ் பேசும் மக்களுக்குத் தான் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்த முன்னுரிமைகள் தமிழர் வாழும் பகுதிகளின் இனவிடாசாரத் தன்மையை மாற்றி அமைப்பதைத் தடுத்து நிறுத்தவே என்பது தெளிவாகத் தெரிகிறது.

### தமிழர் தனித்தன்மையை மறுப்பது

இன்றைய லட்சம் சிங்களவர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியமர்த்துவது என்ற அரசின் யோசனைகள் தமிழர் பகுதிகளில் தமிழரின் அதிகாரங்களை குறைப்பதும் அதன் மூலம் அவர்களின் தனித்தன்மையை மறுப்பதும் ஆக அமைந்துள்ளன.

அப்படிக் குடியமர்த்தப்படும் சிங்களக் குடியிருப்பாளர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பது, ஆயுதங்கள் வழங்கப்படுவது ஆகியன ஆயுதப்படையினருக்கு துணைப்படையாக அவர்களை மாற்றுவதே.

எல்லையில் இன மோதல்

2. போதுமான அளவு

"எல்லை"யில் இனமோதல் ஒன்றை உருவாக்கும் திட்டம் இது என்று கருத முடிகிறது.

இந்த அடிப்படையின் தான் தமிழர் இந்த யோசனைகளை கவனத்துக்கு எடுப்பர்.

தமிழ்ப் பகுதிகளின் இன விகிதாசாரத்தில் மாற்றம் செய்வது: ஆயுதந்தாங்கிய போராளிகளையும் தமிழ் மக்களையும் இராணுவ நடவடிக்கைகளினால் அடக்குவது; பல இனங்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கக்கூடியதான உள்ளூர் அமைப்புக்களை நிறுவுவது— இவைதான் இப்பிரச்சினைக்குத் தீர்வான அரச வகுத்துள்ள திட்டங்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தலங்களைப் பராமரிப்பதை மத்திய அரசு தன்னிடம் வைத்துக்கொள்வது, மாவட்ட எல்லைகளை மாற்றி அமைப்பது ஆகியன அரசின் பிந்திய யோசனைகளில் அடங்கியுள்ளன.

இவை தமிழ் இனம் ஒன்று உண்டு என்பதை மறுப்பதாக அமைந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு, உண்மையான அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தின் கீழ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இராணுவ ரீதியில் தீர்வுகண்டுவிட முடியாது.

### குடியேற்றத்திற்கு எதிர்ப்பு

பாரம்பரியமான தமிழர் பகுதிகளில் சிங்கள மக்களை அரச உதவியுடன் குடியமர்த்தும் திட்டங்களை எமது இயக்கம் எதிர்க்கின்றது.

அப்படிக் குடியமர்த்துவது இனங்களுக்கு இடையே மோதலை விசிவடையச் செய்யும்; வன்செயல்கள் அதிகரிக்க உதவும்.

இரண்டு இனமக்களும் ஒற்றுமையாக வாழும் சந்தர்ப்பத்தை உருவாக்க சிங்களக் குடியேற்றத் திட்டம் உதவாது.

இத்திட்டம் கைவிடப்பட வேண்டும்.

## காமன் வெல்த் விளையாட்டு போட்டியை அச்சுறுத்தும் தென் ஆபிரிக்கவிவகாரம்

உலகிலே சர்ச்சைக்குரிய நாடுகளில் ஒன்றான தென் ஆபிரிக்காவின் விவகாரம் இவ்வாரம் மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

அடுத்தவாரம் பிரிட்டனின் எடின்பரோ நகரில் நடைபெற உள்ள காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டுப் போட்டியே தென் ஆபிரிக்கப் பிரச்சினையை மீண்டும் சர்வதேச அரங்கில் இழுத்து விட்டிருக்கிறது

### ஏழு நாடுகள்

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க பிரிட்டன் மறுப்பதைக் காரணம் காட்டி இது வரை ஏழு காமன் வெல்த் அங்கத்துவ நாடுகள் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளன.

நைஜீரியா, கானா, உகண்டா, தன்சானியா கென்யா, மலேஷியா பஹாமாஸ் ஆகியவையே இந்த ஏழு நாடுகளும் ஆகும்.

சிம்பாப்வேயின் தலைநகரான ஹராரேயில் நேற்று ஆறு ஆபிரிக்க முன்னணி நாடுகள் (Front Line Countries) உச்சி மாநாடு கூட்டப்பட்டிருந்தது

காமன்வெல்த் உறுப்பு நாடுகளான இவை காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை பகிஷ்கரிப்பதா? இல்லையா? என்பதை முடிவு செய்யவே நேற்றுக் கூட்டப்பட்டன.

இந்த நாடுகளின் முடிவும் அனேகமாக பகிஷ்கரிப்புக்குச் சாதகமாகவே இருக்கும் என்று அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவித்திருந்தனர்.

### ராஜீவின் நிலை

தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையை காரசாரமாக விமர்சித்து வருகிறார் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி.

126 இந்திய வீரர்கள் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளத் தயாராக இருந்தனர்.

இந்தியாவும் பகிஷ்கரிப்பில் பங்குபற்று மானால் அது காமன் வெல்த்துக்கு பெரும் ஏமாற்றத்தையே கொடுக்கும். அத்துடன் காமன்வெல்த் அமைப்பின் வீழ்ச்சி அதிலிருந்து ஆரம்பமாகிவிடும்

தென் ஆபிரிக்க விவகாரத்தில் இந்தியா அதிகம் அக்கறை காட்டி வருவதற்கு ஒரு காரணம். அங்கு எட்டு லட்சம் இந்தியர்கள் வசிப்பது தான்.

அதுமட்டும் அல்ல இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தி தனது அஹிம்சைப் போராட்டத்தை முதலில் பரீட்சித்துப் பார்த்த நாடும் தென் ஆபிரிக்கா தான்.

### உச்சி மாநாடு

காமன்வெல்த் தலைவர்கள் உச்சி மாநாடு அடுத்த மாதம் லண்டனில் நடைபெற இருக்கிறது.

தென் ஆபிரிக்க விவகாரம் அந்த உச்சி மாநாட்டின் எதிர்காலத்தை நெருக்கடியை ஏற்படுத்தப் போகிறது என்பதற்கு எடின்பரோ விளையாட்டுப் போட்டி எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஒரு முன் எச்சரிக்கை ஆகும்.

### தட்சர் பிடிவாதம்

பிரிட்டிஷ் பிரதமர் தட்சர் அம்மையார் தமது பிடிவாதப் போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் காமன் வெல்த் அமைப்பே பிளவுபட்டு விடும் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் கடந்த வாரம் எச்சரிக்கை செய்திருந்தார்.

சர்வதேச விவகாரங்களில் பிரிட்டனின் நெருங்கிய நட்பு நாடுகளில் ஒன்றான ஆஸ்திரேலியாவின் எச்சரிக்கை கூட இரும்புச் சீமாட்டியை அசைக்குமா என்பது சந்தேகமே.

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரத் தடையை ஆதரிக்க மறுக்கும் மற்றொரு நாடு அமெரிக்கா.

எனினும் அதிபர் றேகன் அமெரிக்க கறுப்பர் ஒருவரை தென் ஆபிரிக்காவுக்கான அமெரிக்கத் தூதுவராக இவ்வாரம் தெரிவுசெய்துள்ளார்.

இது தென் ஆபிரிக்காவுக்கு எதிரான கறுப்பு இன நாடுகளை ஏமாற்றும் நடவடிக்கையே ஒழிய

(7ஆம் பக்கம் பார்க்க)

**உலக உலா**
என்.பி.சீலன்

## அரசாங்க அலுவலகங்களில்

"சிகதி"

### வட்டாரக்கல்வி அதிகாரிகள்

ஆசிரியர் இடமாற்றங்கள் இடையிடையே சீராக நடைபெற்றாலும், அதிபர்கள், வட்டாரக் கல்வியதிகாரிகளின் இடமாற்றங்கள் குறித்துப் பல முணுமுணுப்புகள் அடிக்கடி கேட்கின்றன.

மன்னார் முல்லைத்தீவு வவுனியா மாவட்டங்களில் இன்னும் சில அதிபர்கள் ஆண்டுக்கணக்காக இடமாற்றம் கிடைக்காது தவிக்கின்றனர். பொதுவாகச் சில வட்டாரக் கல்வியதிகாரிகளோ இருந்தவர்கள் இருந்தவர்கள் தான். இதைவிட்டு மேலதிகாரிகள் கவனம் எடுத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்வார்களா? சீரான இடமாற்றத் திட்டத்தை உருவாக்குவார்களா? மந்திரிகள் வருகையின் மாலை இல்லை. இருந்தும் இடமாற்றம் மற்றும் சலுகைகளுக்காக யாருக்கும் தற்பொழுது ஆலவட்டம், குடை பிடிக்கப்படுகின்றன?

பல பாதைகள் இன்னும் கவனிக்கப்படவில்லை. இதனால் வாகனங்களுக்கும் பொதுமக்களுக்கும் பெரிதும் பாதிப்பு. இதனைச் சம்பந்தப்பட்ட திணைக்களம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்தல் நல்லது

* * *

சிற்றுண்டிச்சாலைகளுக்கு அனுமதிப்பத்திரம் ஆண்டுதோறும் சுகாதாரப் பரிசோதகர் சிபார்சின் பின்னர் வழங்கப்படுகின்றது. ஆனால் சில சிற்றுண்டிச் சாலைகள் சுத்தமான முறையில் பேணப்படுவதில்லை. பொதுவாக பல இடங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற பொதுமக்கள் பல அசுத்தம் நிறைந்த சிற்றுண்டி, தேநீர், உணவு முதலியவற்றை உட்கொள்கின்றனர். சுகாதாரப் பரிசோதகர்கள் அனுமதிப்பத்திரம் வழங்கிய பின் இடைப்பட்ட காலங்களிலும் இச்சாலைகளை தரிசித்தால் சுத்தம் திருத்த இடமுண்டு. இதேபோன்று பார், பாண் சிறிபோகம் செய்பவர்களுக்குச் சுகாதாரக் கட்டுப்பாடு கொண்டு வந்தால் தொற்றுநோய்கள் பரவுவதை தடுக்கலாம்.

* * *

பொது மக்களால் தெரிவிக்கப்படும் புகார்கள் பற்றி மேலதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை என்பது பொதுவான முறைப்பாடு. குறைபாடுகள் தவறுகள் பற்றி புகார் கொடுத்த பின்னரும் புகார்கொடுத்தவர் மேலும் தனது நேரத்தை விரயம் செய்ய வேண்டுமா? குறைபாடுகள் உள்ள மேலதிகாரிகள் தான் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றார்கள் அல்லது மேல் நடவடிக்கைகளை தடுக்கின்றார்கள் என்ற எண்ணத்திற்கு அரசு அதிகாரிகள் இடமளிக்கக்கூடாது.

* * *

பெருந்தெருக்கள் திணைக்களத்தினர் சில மாதங்களுக்கு முன்னர் துரிதமான முறையில் சில வீதிகளைத் திருத்தம் செய்தனர். ஆனால்

திணைக்களங்களில் கடமை புரியும் அரச பணியாளர்கள் இன்றைய சூழ்நிலையில் தாங்கள் கடமை புரியும் இடங்கள் தங்களுக்கு போதிய பாதுகாப்பானவையா என்பதை உறுதிப்படுத்தித் தீர்மானித்துக்கொள்ளுதல் வேண்டும். நிலைமையை தெரிந்து கொண்டும் கஷ்டத்திற்குள்ளாகக் கூடாது. திணைக்களங்களின் தலைமைப் பீடங்களுக்கு இவ்விடயத்தில் பாரிய பொறுப்புண்டு.

## தாமாக இடம் எடுத்து அமர்ந்த வாய்க்கால் தரவை விநாயகர்

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த நீர்வேலி வாய்க்கால் தரவை மூத்தநயினார் ஆலய இரதோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை (20-7-86) நடைபெறுகின்றது. அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

நீர்வளம், நிலவளம் மிக்க நீர்வேலிப் பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களின் வினைகள் தீர்த்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் நீர்வேலி வாய்க்கால்தரவை மூத்த நயினார் கோயில் இரதோற்சவம் நாளை நடைபெறுகின்றது.

நீர்வேலிக்கிராமத்தின் ஈசான திசையிலே இவ்வாலயம் அமைந்துள்ளதால் இவ்வாலயத்தின் சிறப்பால் இக்கிராமம் பலவகையிலும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

இவ்வாலயம் அமைந்துள்ள இடம் இற்றைக்கு ஐந்நூறு வருடங்களுக்கு முன்னரே மூத்த நயினார் கோவில் வளவு என அழைக்கப்பட்டு வந்தது. இவ்வளவினுள் ஒரு கேணியும் அமைந்திருந்தது.

அக்காலத்தில் இக்கிராமத்தினூடாக கால்நடையாகச் செல்லும் பிரயாணிகள் இக் கேணியில் தாகம் நீக்கி இங்கு அடர்ந்த சோலையில் இளைப்பாறிச் செல்வது வழக்கம்.

ஒருநாள் குரும்பசிட்டி கட்டுவன் பகுதி மக்கள் வன்னி நாட்டில் கமம் செய்துவிட்டு, வன்னியிலுள்ள, தமது கமத்தில் கண்டெடுத்தபிள்ளையார் விக்கிரகத்தைத் தமது ஊரில் பிரதிஷ்டை செய்ய எண்ணி தாம் கொண்டு வந்த நெல்லுச் சாக்கினுள் வைத்துக் கொண்டு வந்தார்கள்.

அப்படி வந்தவர்கள் தாகமிகுதியால் தமது தாகத்தைத் தீர்ப்பதற்காக குறித்த இக்கேணிக்குள் நெல்லுச் சாக்கை இறக்கி வைத்துவிட்டு அக்கேணியிலேயே தண்ணீர் குடித்து தாகத்தைத் தீர்த்த பின்னர் குறிப்பிட்ட நெல்லுச்சாக்கைத் தூக்க முயற்சி செய்தனர். அச்சாக்கு அசையவே இல்லை

தம்மாலான சகல முயற்சிகளையும் செய்து சாக்கு அசையாதமை கண்டு பெரிதும் ஆச்சரியப்பட்டனர்.

தெய்வ சக்தியை மனிதசக்தி வெல்லுமா? விக்கிரகத்தோடு கூடிய அந்த நெல்லுச்சாக்கை அந்த இடத்திலேயே வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். இச்செய்தியைக் கேள்வியுற்ற அக்காணிச் சொந்தக்காரரான சிறுப்பிட்டி வாசியானவர் அக்காலத்திலிருந்த சிவப்பிராமணரான பிரம்மஸ்ரீ சிவசாமிக் குருக்களோடு ஆலோசித்து அக்காணிக்குள்ளேயே கோவில் அமைத்து இவ்விக்கிரகத்தைப் பிரதிஷ்டைசெய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தாமாகவே இடம் எடுத்துக் கொண்ட விநாயகர் தம்மை விழிபட்டு வரும் அடியார்களின் அல்லல் அகற்றி அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

இதுமட்டுமா? இக்கிராமத்தில் இருந்து காலஞ்சென்ற சின்னப்பு தம்பிப்பிள்ளை அவர்கள் பூசகரியில் உள்ள தமது உரிமையான பிள்ளையார் கோவிலுக்குக் கொண்டு செல்வதற்காக ஓர் வாகனத்தைச் செய்து கொண்டு செல்வதற்கு நாளும் குறித்து விட்ட

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமருந்தான ஒரு தருமருந்து

சமயம் என்றும் பூஜை என்றும் பலர் எத்தனையோ வருடங்களைக் கழிக்கின்றனர் அனேகர் இருந்த இடத்தில் இருப்பதைப் பார்க்கிறோம்.

இதற்கு என்ன காரணம் என்று ஒவ்வொருவர் மனகாரக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

எங்கள் மத்தியில் கொழும்புத்துறையில் வாழ்ந்த தவத்திரு யோக சுவாமிகள் பலருக்கு குருவாக இன்றும் இருக்கிறார். இவரது திருவடித் தீண்டுதலால் பல ஆயி

நாளை மறுதினம் திங்கட்கிழமை குரு பூர்ணிமா தினமாகும் அதனையொட்டி இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது

தமக்கு ஆத்மீக உணர்வு ஊட்டிய ஞானத்தந்தையாகிய சுவத்திரு யோகசுவாமி தமக்கு குருவாக கிடைத்த பேறு குறித்து சுவாமி சித்ரூபானந்தா இந்தக் கட்டுரையில் எழுதியுள்ளார்.

பண்புகள் யாவும் அறிய நேர்ந்தது.

## சுவாமி சித்ரூபானந்தா

ரக்கணக்கான குடும்பங்கள் இன்றும் சாந்தமாக வாழ்வதைப் பார்க்கிறோம்.

கிறிஸ்தவ பாடசாலையில் பல வருடங்களாகப் படித்தவன் யான். 1955 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் முதன் முதலாக சிவயோக சுவாமிகளின் தரிசனம் கிட்டியது. கிடைத்த மாத்திரத்தில் பரமேஸ்வராக் கல்லூரியில் படிக்க வாய்ப்புக் கிட்டியது. பரமேஸ்வராக் கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்க நேர்ந்தது

விடுதியில் இருக்கும் பொழுது சிவன் கோயிலை காலையும் மாலையும் தரிசித்தலும், கோயிலைக் கூட்டும் கடமையும் ஏற்பட்டது முதன்முதலாக சிவராத்திரி அங்குதான் அனுஷ்டிக்க நேர்ந்தது

சுவாமிகளின் ஆசிர்வாதத்தினால் சமயப்

உயர் படிப்புக்காக கொழும்பில அக்குவைனாஸ் பல்கலைக்கழக கல்லூரியில் சேர்ந்து படிக்கும்பொழுது கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலைக்கு செல்ல வாய்ப்பு 1958 ஆம் ஆண்டில் கிடைத்தது

கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் 1966 ஆம் ஆண்டு சேரும் வரைக்கும், சுவாமிகள் பூவுலகில் வாழ்ந்த காலத்தில் பல தடவை சந்திக்க வாய்ப்புக் கிட்டியது சுவாமிகள்தான் எனது வாழ்வில் ஆத்மீக உணர்வை ஊட்டிய ஞானத்தந்தை.

சுவாமிகளை பார்க்கச் செல்லும் பொழுது பல அரிய கருத்துக்களை விளக்குவார். அப்பொழுது அக்கருத்துக்களின் முழுத் தன்மையும் விளங்கவில்லை. ஒருநாள் சுவாமிகள் 'எல்லாம் ஒன்று. அப்படியென்றால் உள்ளே வாரும்' என்றார். யான் ஒன்றும் விளங்காது உள்ளே சென்றுவிட்டேன். சுவாமிகள் 'உமக்கு சரியாக இது இப்ப விளங்கவில்லை, சிறிது காலம் செல்ல வாரும், அப்பொழுது நான் பேசும் பாஷை விளங்கும்' என்றார்.

1964ஆம் ஆண்டு மகா சிவராத்திரிக்கு கதிர்காமத்திற்குப் போய் மொட்டையடித்துவிட்டு திரும்ப நேர்ந்தது, கதிர்காமத்தில் இருக்கும் பொழுது திரு ஸ்பென்சர் ராசரத்தினத்தின் பயங்கரமான மரணத்தையும் பார்க்க நேர்ந்தது

1964ஆம் ஆண்டு கதிர்காமத்தில் இருந்து வந்த குறுகிய காலத்தில் சிவயோக சுவாமிகள் மகா சமாதி அடைந்தார்.

மகா சமாதி ஊர்வலத்தில் மொட்டை அடித்த தலையுடன் சென்றவர் நான் மாத்திரம்தான் அப்பொழுதே சுவாமிகள் எனக்குத் துறவற வாழ்வைத் தீர்மானித்து விட்டார் போலும் சுவாமிகளின் ஆசீர்வாதத்தால் அன்று எனக்குக் காட்டிய காட்சியை 1981ம் ஆண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜயந்தி தினத்தில் எனக்கு சந்நியாச வாழ்க்கை கிடைத்தது.

முழுக்கமுழுக்க சுவாமிகளின் ஆசீர்வாதத்தால் தான் யான் இன்று இப்படி இருக்கிறேன். சுவாமிகள் இருக்கும் பொழுது ஒரு நாள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# கடல் கடந்த கடிதம்

## தெருவெல்லாம் இளைஞர்!

தம்பி,

மருத்துவக்கல்லூரி மாணவி ஒருத்தியின் அண்ணன் சைக்கிளிலே போகும்போது மோதுண்டு இறந்தது பற்றி வருத்தத்தோடு எழுதிய கடிதம் கிடைத்தது. தாய்வழி, தகப்பன் வழிக் குடும்பங்களுக்கு ஒரே ஆண்மகன்; வேலை ஒன்று கிடைத்து அடுத்தநாள் கொழும்பு செல்லவிருந்தவன்!

பத்திரிகைகளிற் படித்தேன். இலங்கையில் அரைமணிக்கொருவர் தெரு விபத்திலே அகப்படுகிறார் என்று விபத்துக்களைத் தவிர்ப்பதில், தம்பி, விழிப்பாயிருக்கவேண்டிய காலமிது!

திருத்தப்படாத தெருக்கள் — திருந்த முடியாத வாகனங்கள் — எனவே திருத்த வேண்டியவர்கள் நாங்கள்தான்! வாகனங்களின் வகைகளும் பெயர்களும் பெருகிவிட்டன. சிலவற்றின் பெயர்களோ, 'கொண்டு வா உடனே!' எனக் கட்டளையிடும் யமனையே நினைவுபடுத்துகின்றன!

பல தேவைகட்குப் பரபரப்பாக ஓடுகிறார்கள். பெடியள் பரபரப்பின் காரணத்தை அறிய ஓடுகிறார்கள். வேறு பலர் ஓடி விளையாடும் பாப்பா நீ ஒதுங்கியிருக்கலாகாதா? டியூஷனுக்குப் போகிறவர்கள் ஒருவர் பின் ஒருவராகவா போகிறார்கள்? தெருவிலேயே பாடங்களைப் படிக்கக் கூட்டம் கூட்டமாகப் போகிறார்கள்! வீதி ஒழுங்குகள் மீறப்படுகின்றன. விபத்துக்கள் வருகின்றன.

சிலர் இதைக் கவனிப்பதாகவும் கேள்வி; போற்றுகிறேன்; ஆனால் முயற்சி போதாது எல்லோரும் விழிப்பாக இருந்து வீதி ஒழுங்குகளைப் பின்பற்றவேண்டும் பாடசாலைகளிலே வீதி ஒழுங்குகள் பற்றிய விளக்கம் கொடுக்கிறார்களா?

விடுதலை என்பது, தம்பி, விதிகளை மீறுவதிலல்ல. விதிகளை ஏற்றுநடப்பதிலும் தங்கியுள்ளது!

"Those who obey can command!"

கீழ்ப்படிபவன்தான் கட்டளையிடவும் வல்லவன்!

அன்புடன்

—சிவா—

# சீன தேசத்தில் நடைபாதைக் கோயில்கள்

இந்தியாவில் நடைபாதைக் கோவில்களை எங்கும் காணலாம். ஜனநடமாட்டம் நெரிசல் உள்ள பாதையின் மத்தியிலும் நடமாட்டம் இல்லாத ஒற்றையடிப்பாதையிலும் எங்கும் நடைபாதைக் கோயில்கள் உண்டு.

இந்தநிலை இந்தியாவில் மாத்திரமன்றி சீனாவிலும் தொல்லை விளைவிப்பதாக தெரிகிறது.

பீஜிங் அருகிலுள்ள ஒரு சிறு குடியிருப்புப் பகுதியில் மாத்திரம் 400 நடைபாதைக் கோயில்கள் அகற்ற வேண்டியிருந்ததாம் அவற்றில் பல சிலகுடும்பங்களில் குலதெய்வங்கள் என்ற பெயரில் அமைந்தவை. மற்றும் சில பள்ளிக்கூட மைதானங்களையும், கடைத் தெருக்களையும், விளைநிலங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. குறிப்பாக சீனாவில் கிழக்கு மாநிலத்தில் நடைபாதைக் கோயில்கள் நிரம்பிக்கிடக்கின்றனவாம்.

தமிழர் பிரச்சினை: ஒப்பந்தங்களும் தீர்வு முயற்சிகளும்

# மாகாண சபைக்கு ஒரு அங்குலக் காணி தானும் உரித்தில்லை

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகிய இரண்டிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தனித்துவமும் - அது தமிழ் மாநிலம் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளன. விசேடமாக டட்லி- செல்வா ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தளவில் தமிழருக்குரிய விசேட உரித்து தெளிவாக்கப்பட்டுள்ளது இணைப்பு "சி" யில் மேலெழுந்தவாரியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வேறுபாடு காட்டப்பட்டுள்ளது ஆனால் ஜனாதிபதியின் திட்டங்களிலோ இம்மாகாணங்களின் பெயர் கூட இடம் பெறவில்லை.

அடுத்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேற்றத் திட்டங்களை செயற்படுத்துவதை உள்ளடக்கிய அரச அதிகாரத்தில் சிலவற்றை பெற்றுக்கொள்வதில் தமிழ்த் தலைவர்கள் காட்டிய அக்கறை மேற்கண்ட ஒப்பந்தங்களில் கீழ்க் கண்ட வகையில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் கீழ்க்கண்ட இணக்கங்கள் காணப்படுகின்றன:-

(அ) நாடாளுமன்றம் அதிகாரங்களைக் கையளித்து, அவற்றை சட்டவாக்கத்தில் குறிக்கும். விவசாயம், கூட்டுறவு, காணி, காணிஅபிவிருத்தி, குடியேற்றத்திட்டங்கள், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், கடற்றொழில், வீடு, சமூகசேவை, மின்சக்தி, நீர்த்திட்டங்கள், தெருக்கள் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய விடயங்களில் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டுமென்பது ஒத்துக் கொள்ளப்பட்டது.

(ஆ) குடியேற்றத் திட்டங்களைப் பொறுத்தளவில் பிரதேச சபைகளின் அதிகாரம் அச்சபைகளின் பிரதேச அதிகார எல்லைக்குள் காணிகள் வழங்கப்படும்போது அக்காணிகளின் குடியேற்றவாசிகளைத்தெரிவு செய்யும் அதிகாரத்தையும், அத்தகைய திட்டங்களுக்கு வேலையாட்களைச் சேர்க்குமிடத்து அத்தகைய வேலையாட்களைத் தெரிவு செய்யும் அதிகாரத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்பது ஒத்துக்கொள்ளப்பட்டது.

டட்லி - செல்வா ஒப்பந்தத்தில் மாவட்ட சபைகளுக்கான அதிகாரங்கள் எவை எவை என குறிக்கப்படாது இது பற்றி இரு தலைவர்களும் முடிவு செய்வர் என மட்டும் கூறப்பட்டிருந்தது. இணைப்பு "சி" யில் பிரதேச சபைகள் - பிரதேசத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவும், நீதி நிர்வாகம் செய்யவும், சமூக பொருளாதார அபிவிருத்தி, கலாசார விடயங்கள், காணிக் கொள்கை ஆகியவற்றை உள்ளடக்கிய குறிப்பிட்ட விடயங்களில் பிரதேச மட்டத்தில் சட்டவாக்க அதிகாரமும் நிறைவேற்று அதிகாரமும் கொண்டவையாக அமையும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

### "செங்கோல்"

### தேசிய கொள்கை ஏன்?

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் திட்டங்களின் அடிப்படையில் விவசாயம், கைத்தொழில், கல்வி, கலாசாரம் ஆகிய விடயங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்படவுள்ளது. ஆனால் இவ்விடயங்களில் "தேசியக் கொள்கை" ஒன்றை வகுக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கே இருக்கும். "தேசியக் கொள்கை" என்றால் என்ன? கொள்கைக் குழப்பங்களும் - மாறுபடுகளும் - குத்துக்கரணங்களும் நிறைந்த அரசியல் அரங்கில் "தேசியக் கொள்கை" என்றால் வியாக்கியானம் உண்டா? அதை எவ்விதம் அறியலாம்? எவ்விதம் கண்டுபிடிக்கலாம்?

இன்னும் உள்ளூர் சட்டம் ஒழுங்கு பேணல் — காணிக்குடியேற்றம் சம்பந்தமாகவும் சில அதிகாரப்பங்கீடு செய்யப்படவிருப்பதாக திரு. ஜெயவர்த்தனவின் திட்டங்களில் சொல்லப்பட்

(7ஆம் பக்கம் பார்க்க)

# எங்களின் பிள்ளைகுட்டிகளை

## வெட்டி வதையாதீர்!

அன்பையும் பாசத்தையும் கொட்டி பிள்ளை குட்டிகளை வளர்ப்பர். ஒருவன் தனது நண்பனைக் கண்டால், 'பிள்ளை குட்டி இருக்கா?' என்று குசலம் விசாரிக்கின்றான். ஒவ்வொருவரும் பிள்ளை குட்டிகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்களோ அவ்வளவு முக்கியத்துவத்தை தென்னைக்கும், வாழைக்கும் கொடுத்து வைத்தார்கள்

தமிழர்களின் அன்றாட வாழ்வில் ஒன்றிய இவ்விரு பயிர்களும் அவர்களின் நன்மை தீமைகளிலும் பங்கு வகிக்கின்றன என்பது யாவரும் அறிந்த உண்மையே

தேங்காய் பத்துரூபாய் விற்றால் என்ன? இருதய நோய்க்குக் காரணமான கொழுப்பு அதில் இருந்தால் என்ன? தேங்காய் சேர்க்காமல் ஒரு சமையலா?

இப்படி எங்களுக்கு உதவுகின்ற தென்னைகளையோ அன்றில் அதன் ஓலைகளையோ கண்டபடி வெட்டி வீழ்த்தலாமா? சற்றே சிந்தியுங்கள்.

நேற்றுப் பிறந்த கிளிநொச்சி நகர் வாரம் இருமுறை விழாக்கோலம் பூண்டதன் காரணம் தெரியுமா? அங்கு விளைந்த வாழைக்குலைகளை வாங்க இருநூறு மைல் தூரத்தில் இருந்து சிங்கள மக்களே வந்தார்கள் என்பதுதான்.

பொருளாதார ரீதியிலும் இப்பயிர்கள் தமிழ் மக்களுக்குக் கை கொடுத்துதவியது, உதவுகின்றது என்பதில் ஐயம் இல்லை.

ஒரு ஆப்பிள் பழம் டாக்டரையே துரத்திவிடும் என்பர் ஆங்கிலேயர். பழங்கள் நோய் நொடியின்றி திடகாத்திரமாக வாழ உதவுகின்றன.

விற்றமின் குளிசைகளுக்கே தட்டுப்பாடு வரப்போகின்ற காலத்தில் இப்பழங்களின் உற்பத்தியும் குறைந்து விட்டால் என் செய்வது?

'தென்னையைக் கட்டியான் பனையை வெட்டியான்' என்றார்கள் முதியோர்கள் அதாவது பனையை வெட்ட வெட்ட அதன் பயன் அதிகரிக்குமாம். ஆனால் தென்னையோ வட்டு பிரித்தாலே அதன் பயன் குறைந்துவிடும் என்பதுதான் கருத்து.

முதிர்ந்த தென்னை மரங்களில் ஒரு ஓலை

அதைத் தொடர்ந்து ஒரு பாளை இப்படியாகத்தான் தென்னை மரம் வளர்கின்றது. இதன் அர்த்தம் என்ன?

பச்சையம் நிறைந்த தென்னோலைகள் சூரிய ஒளியின் உதவியுடன் உணவை உற்பத்தி செய்து பாளையில் உள்ள குரும்பைகளுக்கு தாயைப்போல் உணவூட்டி வளர்க்கின்றது.

ஒரு ஓலையை வெட்டினால் ஒரு குலை தேங்காயின் உற்பத்தி குறைந்து விடும். எனவே தயவு செய்து தென்னோலைகளையும் வெட்டாதீர்கள். இதே மாதிரித்தான் வாழைகளும் இலைகளை வெட்டினால் தன் உற்பத்தித் திறனைக் குறைத்துவிடும்

மரணங்கள் சம்பவிப்பது இயற்கை. அதுவும் தற்போது நடைபெறும்

(7ம் பக்கம் பார்க்க)

வீ. துருவசங்கரி
M. Sc Agric. (Moscow)
M.Phil. Agric (Ceylon)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

## பரீட்சை எடுத்த பண்டிதரானமை II

உரையாசிரியர் என்று பெயரெடுத்த மட்டுவில் கணபதிப் பிள்ளை வேற்பிள்ளை அவர்கள், ஆறுமுகநாவலர் அவர்களிடம் முறையாகக் கற்றவர் திருவாதவூரடிகள் புராணம், அபிராமி அந்தாதி முதலான அரும்பெரும் நூல்களுக்கு அகலவுரை எழுதிப் புகழ் பெற்றவர். சிதம்பரத்தில் நாவலர் அவர்கள் தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமையாசிரியராயிருந்து தமிழறிஞர்களை உருவாக்கி வந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பெறுவதற்கு முந்திய காலம் அது. அவரிடம் கற்று விற்பத்திமான்களாகிய பலருள் இருவர் பெருமக்கள் வித்துவான் நசுப்பையபிள்ளை அவர்களும், வித்துவான் தி. ச. தண்டபாணிதேசிகர் அவர்களுமாவர். தண்டபாணி தேசிகர் அவர்கள் தமிழ்நாட்டியத் திருக்கைலாய பரம்பரையாதீனங்களில் மகா வித்துவானயிருந்து பல நூல்கள் செய்தும், உரையெழுதியும், வெளியிட்டும் புகழ் பெற்றவர். அவர் எழுதிய விநாயகர், ஆடவல்லான், முருகன் என்னும் முப்பெரு நூல்களும் மிகவும் உச்சமானவை.

வித்துவான் சுப்பையபிள்ளை அவர்கள் அகத்திய முனிவரனைய தோற்றமும், இலக்கிய இலக்கண அறிவாற்றலும் பாடஞ் சொல்லும் வேகமும் வாய்ந்தவர். அவர் எல்லாவகையாலும் யாழ்ப்பாணத்தில், குமாரசுவாமிப்புலவர் அவர்களின் இடத்தை நிரப்பக் கூடியவர் எனக் கண்ட உரையாசிரியர் அவரை இங்கே அனுப்பி

ஞர். வடமொழியையும் தென்மொழியையும் வரன்முறையாப் பேணிப் படித்த வித்துவான் சுப்பையபிள்ளை அவர்களின் வருகையைப்பற்றி அவரிலும் பார்க்க ஆறு மாத காலம் மூத்தவராய பண்டிதமணி தம் மனநிலையைக் கூறியவாறு படித்தறியலாம்.

'வித்துவான் அவர்களை பாடங்கேட்க வேண்டும் என்னும் ஆசை அதிகரித்தது. வித்துவான் அவர்கள் அகமும் முகமும் மலர்ந்து என் ஆசையைப் பூர்த்தி செய்ய உடன்பட்டார்கள். புலவர் பெருமான் என் கசடுகளைக் களைந்து பக்குவஞ் செய்து வைத்தது வித்துவான் அவர்களை எளிதிற் பயன் செய்து கொள்வதற்குப் பெரியதொரு

### 'இலக்கண இலக்கிய திறமையைக் கண்டேன் மழைமுகில் கண்ட மயில் போலாயினேன்"

பிரோபகாரமாயமைந்தது வித்துவான் அவர்கள் நன்னூல் விருத்தி தொல்காப்பியம் எழுத்துக்கு நச்சினார்க்கினியம், இளம்பூரணம் என்பவைகளைப் பாலபண்டித வகுப்புக்குப் படிப்பிக்கும் போதும் நான் பங்குபற்றக் கூடியதாயிருந்தது. வித்துவான் அவர்களின் தொடர்பு எனக்கிருந்த

நான் காணவில்லை. அவர்களுடைய இலக்கண இலக்கியத் திறமைகளையே முதலிற் கண்டேன். கண்டதும் மழைமுகில் கண்ட மயில் போலாயினேன். என் களிப்புச் சொல்லுந் தரமன்று. மனேச்சர் அவர்கள் வித்துவான் அவர்களை ஏற்று என்னைப் பயன் செய்து கொள்ளுமாறு பணித்தார்.

மாலை நேரத்தில் பிரவேச, பாலபண்டித வகுப்புகளை வித்துவான் அவர்கள் நடத்துவதற்கு இயன்ற ஒழுங்குகளை நான் செய்து வைத்தேன். இந்துக் கல்லூரியில் மேல வகுப்பிற் படிக்கும் மாணவர்களும் தமிழ் ஆசிரியர்களும் அவ் வகுப்புக்களுக்கு வந்து படித்தார்கள் நானும் அவ்வகுப்புகளில் பங்கு பற்றிக் கொள்வேன். காலை நேரத்தில் எனக்கு மாத்திரம் பாடஞ் சொன்னார்கள். வித்துவான் அவர்களின் இலக்கணத் திறமையைக் கண்ணுற்ற எனக்குப் பரீட்சையின் ஆசை போய் சேனாவரையம், சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, இலக்கணக்கொத்து, பிரயோகவிவேகம், கருக்க... வித்துவான் அவர்களிடம்

பரீட்சைப் பயத்தைப் பறந்து போகச் செய்து விட்டது.

அமெரிக்கமிஷன்பள்ளியில் ஐந்தாம் வகுப்புப் படித்துவிட்டுப் பல வருஷம் கல்வித் தொடர்பு அறிந்து நின்றிக் காலங் கழித்த நான், நாவலர் பள்ளிக்கூடத்தை அணுகி மனேச்சர் அவர்கள், புலவர் அவர்கள் அநுக்கிரகம் ஒருபுறமிருக்க வித்துவான் அவர்களின் உதவியால்,1926 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஆண்மக்களில் பண்டிதர் என்று ஒருவர் இல்லாத காலத்தில் மதுரைப் பண்டித பரீட்சையிற் சித்தியெய்தினேன். காலத்தினாற் செய்த உதவி வித்துவான் அவர்கள் செய்த உதவி.'

பண்டிதமணி அவர்கள், 'யாழ்ப்பாணத்தில் ஆண்மக்களில் பண்டிதர் ஒருவர் இல்லாத காலத்தில்' என்றெழுதிய தொடரின் ஒவ்வொரு சொல்லும் ஆராய்சற்குரியது இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதராவதற்கு முன் இலங்கையில் பண்டிதராயினோர் இருவர், பண்டிதைகளாயினோர் இருவருமாக நால்வர் செந்தமிழ்த்திறனறிந்தினிதிருந்தனர்

பண்டிதர்களான ஆண்கள் இருவருள் மூத்தவர் மட்டக்களப்பைச் சேர்ந்த சாமித்தம்பி மயில்வாகனம் என்னும் பூர்வாச்சிரமப் பெயர் பெற்ற விபுலானந்த அடிகளாவர் இவர் இளமையில் வைத்திலிங்க தேசிகர் என்பாரிடம் தென்மொழி, வடமொழி கற்றவர் சென்னை மெதடிஸ்ற், சென்மைக்கல் கல்லூரிகளில் ஆங்கிலம்கற்று பயிற்றப்பெற்ற ஆங்கில ஆசிரியராயும், விஞ்ஞான ஆசிரியராயும் தகுதி பெற்று, 1917 ஆம் ஆண்டளவில் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதராகிப் பண்டிதர் மயில்வாகனனார் என வழங்கியவர் இவர் படிப்பித்த கல்லூரிகளுள் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியும், மானிப்பாய் இந்துக்கல்லூரியும் அடங்கும்

இவர் சென்பற்றிக்ஸ் கல்லூரியிற் படிப்பித்த காலத்தில்,கந்தமடத்தை அடுத்த ஆனைப்பந்திச் சந்தியில் தென்கிழக்கு மூலையில் உள்ள வீட்டில் வாழ்ந்த போது, எம்மூரவர் இவரைப் பெரிய கோயில் உபாத்தியாயர் என அழைத்தனர். இவர் நாளடைவில் லண்டன் பல்கலைக்கழகத்துப் பி. எஸ் சி பட்டம் பெற்றுப் பெரும் புகழ்பெற்ற பேராசிரியராய் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பீடத்தை முதலில் அலங்கரித்தவர். அக்காலத்துத் தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் பலர் இவருக்கு உதவியாளராயிருந்தனர். இவரின் இனிய சுபாவம் பல்கலைக்கழகத் தாபகரையும் பிறரையும் வெகுவாகக் கவர்ந்திருந்தது என்ப.

அடுத்த ஆண் பண்டிதர் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இராசேந்திரன் குளத்தடியில் வாழ்ந்த இராசஐயனார் என்பவராவர்இவர் மறைமலையடிகளிடம் அபிமானம் பூண்டு தனித்தமிழ் பேசியும் எழுதியும் வந்தவர். யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரியில் சேர் அருணாசலம் மகாதேவா அவர்கள் அதிபராயிருந்த காலத்தில் அங்கே ஆசிரியராயிருந்தவர். பின்னர் சைவாசிரியர் கலாசாலையிலும் அரசாங்கப் பாடசாலைகளிலும் கற்பித்தவர். கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையிலும் சித்தி பெற்றவர் எவருக்கும் அஞ்சா வீர வன்னியர்.

பண்டிதைகளானோர் பருத்தித்துறையையடுத்த மேலைப்புலோலியூரைச் சேர்ந்தவர்கள். சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்தம் புகழ்பூத்த குடும்பத்தில் அவருக்கு மிக நெருங்கிய உறவினரின் பிள்ளைகளாய் வந்த பாலாம்பிகை, பத்மாசனி என்னும் சிறுமியராவார். இவர்கள் தம் உறவினராய் பார்வதிப்பிள்ளை என்னும் பாருத்தைப் பாட்டியாரிடம் சகல நூல்களையும் கற்றார்கள் என்ப. பாருத்தைப் பாட்டியார் சைவப

(6 ஆம் பக்கம் பார்க்க)

★ க. சி. குலரத்தினம் ★

# சூரியசக்தி உதவியுடன் சுத்தமான தண்ணீர்

காலம் காலமாகக் குடிதண்ணீர்க்குத் தவித்துக் கொண்டிருந்த பிட்ராத் தீவு மக்கள் இப்போது எளிதாகக் குடி தண்ணீரைப் பெற தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு குடி தண்ணீர் கொடுத்துதவுவது சூரியன் தான். யூனியன் பிரதேசமாக லட்சத் தீவுகளைச் சேர்ந்த சின்னஞ் சிறுதீவு பிட்ரா. கடலில் உப்பு நீர் சூழ்ந்த பிட்ராத் தீவு மக்களுக்கு குடிநீர் பெறுவது பெரும் பிரச்சனையாக இருந்து வந்தது.

பிட்ரா மிகச்சிறிய தீவாக இருப்பதால் மணற்பாங்கான இதன் மீது பெய்யும் மழை நீர் எல்லாம் கடலுக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறது. மண்ணுக்கு அடியில் உள்ள நீரும் கடல் நீரின் ஊடுருவலால் குடிக்கக் கூடியதாக இல்லை மழை நீரைத் தேக்கி வைத்து பயன்படுத்துவதற்காக மக்கள் குளங்களையும் ஏரிகளையும் வெட்டி வைத்துள்ளனர். ஆனால் விரைவில் வரண்டு போய் விடும். நல்ல தண்ணீருக்காக 56கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மற்றொரு தீவுக்குப் படகில் போய் வருவார்கள். பருவகாலம் மோசமாக இருக்கும் போது இதற்கும் ஆபத்து வந்துவிடும்.

பிட்ராத்தீவு மக்களின் குடிநீர்ப்பிரச்சனையைத் தீர்ப்பதற்காகக் கடலில் இருந்து உப்பு நீரை எடுத்து நல்ல நீராக மாற்றும் நிலையம் ஒன்று அண்மையில் அங்கே நிறுவப்பட்டுள்ளது. மத்திய உப்பு மற்றும் கடல் ரசாயன ஆய்வு நிலையம் இதனை அமைத்துக் கொடுத்தது. சூரிய ஒளியிலிருந்து பெறப்படும் எரிசக்தியைப் பயன்படுத்தி இந்த நிலையத்தில் உப்பு நீரைத் தூய நீராக மாற்றுகிறார்கள்.

ஆதாரம் - கலைமகள் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேலி பண்ணினுல் கேடு விளையும்

ஒரு முறை ஒரு முயலும் ஓர் ஆமையும் சந்தித்துக் கொண்டன. ஆமையைப் பார்த்த முயல், 'நீ என்னைப் போல் வேகமாக ஓட மாட்டாயே,போட்டிக்கு வருகிருயா?' என்று கேட்டது.

ஆமையோ, 'உன்னுடன் போட்டி போட என்னுலாகுமோ, உனது வேகமென்ன எனது வேகமென்ன-' என்று கவலையோடு கூறியது. முயல் ஆமையைப் பார்த்துச் சிரித்துக் கொண்டது.

இடையில் வந்த நாயொன்று, 'நீங்கள் இருவரும் ஓட்டப் போட்டி நடத்துங்கள். யார் வெல்கிறீர்கள் பார்க்கலாம்?' என்றது.

இவர்களின் கேலிப் பேச்சு ஆமைக்குக் கோபத்தை உண்டு பண்ணி விட்டது. 'சரி போட்டி வைப்போம் முயலாரே! ஓட ஆயத்தமா' என்றது ஆமை.

'நான் ரெடி. நீர் ரெடியா?' முயல் கேலியாகக் கேட்டது. இதற்கிடையில் நாயார் முன்னே வந்து நின்று 'ஆயத்தம் ஆரம்பம் ஓடு' என்றது.

ஆமையும் முயலும் ஓட ஆரம்பித்தன. மிகவும் வேகமாகத் தாவித் தாவி ஓடியது முயல். ஆமையோ தன்னுல் இயன்ற மட்டும் வேகமாக ஓடிச் சென்றது.

ஓட வேண்டிய தூரத்தில் முக்காற்பங்கு ஓடி விட்ட முயல், இவ்வளவு தூரத்தையும் ஆமை ஓடிக்கடக்க வெகு நேரம் ஆகுமே என்று எண்ணி ஓடிய களைப்புத் தீர ஓரமாகப் படுத்து விட்டது.

மெது மெதுவாய்த் தாண்டித் தாண்டி வந்த ஆமை-முயல் படுத்திருப்பதைக் கண்டது. அது சத்தஞ் செய்யாமல் முயலைத் தாண்டி விட்டது. மறுகணம் வெகு வேகமாய் ஓடித் தரிப்பிடத்தை அடைந்து விட்டது.

மத்தியஸ்தம் வகித்த நாயோ ஒன்றும் பேச முடியாமல் ஆமையின் வெற்றியை ஒப்புக் கொண்டது வெற்றி வாகை சூடிய ஆமைக்குக் கழுத்தில் மாலே போடப் பட்டது.

களைப்பாறிய முயல் தான் கண்ணயர்ந்து விட்டதை உணர்ந்து, ஆமை என்னைத் தாண்டியிருக்குமோ, சீ எப்படிப் போயிருக்க முடியும் என எண்ணிக் கொண்டு ஓடியது. முடிவிடத்தில் பார்த்தால் ஆமை மாலேயும் கழுத்துமாய் நின்றது.

முயல் தன் தோல்வியை ஒப்புக் கொண்டது.

எம்மிலும் மெலிந்தவர்களைப் பார்த்து நாம் ஒரு போதும் கேலி பண்ணக் கூடாது ஆண்டவன் படைப்பில் ஒவ்வொரு விசித்திரம் இருக்கும் அது வியத்தகு அருள்.

— ஆரெஸ்



## பழைய பெயரும் புதிய பெயரும்

| பழைய பெயர் | | புதிய பெயர் |
|---|---|---|
| 1. பாரதம் | — | இந்தியா |
| 2. ஸ்கந்திநேவியா | — | டென்மார்க் |
| 3. கொன்ஸ்தாந்திநேபிள் | — | இஸ்தான்புல் |
| 4. ஒல்லாந்து | — | நெதர்லாந்து |
| 5. மொசப்பத்தேமியா | — | ஈராக் |
| 6. பேர்சின் | — | ஈரான் |
| 7. சீயம் | — | தாய்லாந்து |
| 8. போர்மோசா | — | தைவான் |
| 9. ஐபீரியன் குடாநாடு | — | ஸ்பெயின் |
| 10. அயர் | — | அயர்லாந்து |

தொகுப்பு: வை விஞயகதாஸ்
பரந்தன் மகாவித்தியாலயம்.

## வட்ட நிலா

"ஸ்ரீ"

வட்ட நிலா வருகுது
வண்ண நிலா வருகுது
பட்டு நிலா வருகுது
பவள நிலா வருகுது

பந்து போல வானிலே
பரந்து நீயும் வந்திட
தம்பி வந்து பார்க்கிறுன்
தங்கையும் பார்க்கிறுள்

மறைந்து மறைந்து போவதேன்
வளர்ந்து வளர்ந்து வருவதேன்
பறந்து ஓடி வந்துமே
பார்க்க முடிய வில்லையே

புகார் வந்து மறைக்கவே
புனிதா நின்று அழுகிருள்
சடாரென்று நீ தெரிந்ததும்
சந்தோஷமாய்ச் சிரிக்கிருள்.

## தாவித் தாவிப் போகுதே

* தொப்பிக் காரன் தூங்கையிலே
தொப்பி எடுத்த குரங்குகள்
தொக்கு தொக்கென தொங்குதே
தோழரோடு கூடிக் கூடி
தொக்கு தொக்கென தொங்குதே

* தாயும் குட்டியுமாகவே
தாவித் தாவிப் போகுதே.
தயவாய் வாங்கித் தின்னுதே.
தா! தா! என்று கேட்குதே

—தம்பி.

## சுகவாழ்விற்குச் சில வழிகள்

1. சில பெண்களுக்கு தலையிலும், புருவத்திலும் பூச்சி வெட்டு ஏற்பட்டு அந்த இடத்தில் முடி வளராது. இதற்கு சுத்தமான தேனில் வெள்ளைப் பூண்டைப் பொடி செய்து கலந்து தடவினுல் போதும் பூச்சி வெட்டு குணமாகி முடி வளரும்.

2. உங்களுக்கு வாயில் புண் இருக்கிறதா? கவலை வேண்டாம். தேங்காய்ப் பாலையும் சக்கரையையும் சாதத்தில் கலந்து சாப்பிடுங்கள். புண் குணமாகி விடும். அடிக்கடி வெறும் தேங்காயை மென்று தின்றுல் கூடப் போதும்.

3. தொண்டைக் கரகரப்பு, கீச்கீச் வகையரு வந்து விட்டதா? அதற்கு ஒரு டம்ளர் பாலில் கொஞ்சம் மஞ்சள் பொடி, மிளகுப்பொடி பனங்கற்கண்டு இவற்றை சேர்த்துச் சுடச்சுட அதனைக் காய்ச்சுங்கள். எந்த அளவுக்கு தாங்க முடியுமோ அந்த அளவு சூட்டோடு குடித்து விடுங்கள். தொண்டைக் கரகரப்பு ஓடி விடும்.

4. உடல் பருமன் குறைய வேண்டும் என விரும்புகிறவர்கள் இரவுச்சாப்பாட்டைக் குறைவாகச் சாப்பிட வேண்டும். காலையில் அதிகமாக சாப்பிட்டு இரவில் குறைவாகச் சாப்பிடுபவர்கள் சீரான உடம்போடு சிறப்பாக வாழ்வார்கள்.

5. வேப்பம் பூ ரசம் வைத்து சாப்பிட்டு வந்தால் வயிற்றிலுள்ள பூச்சிகள் செத்து விடும் இது பித்த நீரையும் சமப்படுத்துகிறது.

6 உடலில் எங்கேயாவது அடிபட்டு அந்த இடத்தில் வீக்கம் ஏற்பட்டு விட்டால் உடனே அந்த இடத்தில் வெந்நீர் ஒத்தணம் கொடுத்தால் போதும் வெந்நீர் ஒத்தணம் வீங்கிய இடத்தை சமப்படுத்தி விடுகிறது.

- சியாமளா தியாகராஜா-

# ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதிய ?

இன்றைய காலகட்டத்தில் எவ்வளவு தூரம் சமூகம் முன்னேறி இருந்தாலும் பெண்ணின் நிலையைப் பொறுத்தளவில் அது ஓர் சாபக்கேடாகவே காணப்படுகின்றது. இல்லை. தங்களுக்கு இது தேவையில்லை என்று பெரும்பாலான பெண்கள் நினைக்கின்றுர்கள். இவர்கள் இப்படி எண்ணினுல் பெண்ணடிமைநிலை எவ்வாறு இல்லாது ஒழி

## பெண்கள் ஏறபது என்னமுறையில் தகும்

பொருளா தாரத்துறையில் நோக்கும் போது பெண்கள் ஆண்களுக்கு சமமாகத் தொழில் புரிந்தாலும் கல்வி கற்றுலும் சமூகத்தில் அவர்களின் பங்கை மற்றவர்கள் பெண்கள் செய்யும்.

பெரும்பாலும் பெண்களே தமது இந்த நிலைக்கு காரணமாக இருக்கின்றுர்கள். ஆண்கள் எதையும் செய்யலாம் ஆனுல் பெண்கள் செய்ய

செல்வி. குகனேஸ்வரி சிவரத்தினம்

உணர்வது இல்லை.

இன்று எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் பெண்ணுக்கு சமவுரிமை வேண்டும் என்பவர்கள் அத்துடன் நின்றுவிடுகின்றுர்கள். சொல்வதைச் செயலில் காட்ட முன்வருவதில்லை. பெண்ணடிமை நிலை மிகைப் கூடாது. ஆண் எப்படியும் வாழலாம் என்று பெண்சமுதாயமே இடங்கொடுக்கும்போது ஆண்களையும் முற்றுமுழுதாக பிழை சொல்ல முடியாது.

ஒவ்வோர் ஆண்மகனும் தன்னை ஈன்றவள் ஓர் பெண், தன் மனைவி ஓர் அவனும் அதுபோல் தானே எதிர்பார்ப்பான் என்று எண்ணுவது இல்லை

பெண்ணிற்கு சமவுரிமை கல்வி, தொழில் என்பவற்றில் இருந்தால் மட்டும் போதுமா? இல்லை பெண்ணடிமை நிலை ஒழிந்திடுமா? அன்றுட வாழ்க்கையிலும் பெண்மைக்குச் சமவுரிமை கொடுக்கப்படவில்லையே. ஆண்கள் எதையும் செய்யலாம் எப்படியும் நடக்கலாம் பெண்கள் அப்படியல்ல என்கிருர்கள். ஆணிற்கு மட்டும் ஓர் நீதி அதே நேரம் ஓர் சமூகத்தின் முன்னேற்றத்தில் பெருமளவு பங்கு வகிக்கும் பெண்ணிற்கு வேறு நீதி என்று சொல்வது நன்றன்று. ஒழுக்கத்துடன் வாழத்தான் வேண்டும். ஆனுல் அது பெண் மட்டுமல்ல. ஆணும் தான்.

பண்டைய காலத்திலும் தற்காலத்தில் பெண்கள் சகலவிதமான தொழில்களிலும் தமது பங்களிப்பைத் தருகின்றுர்கள்.




படுத்தப்பட்டுள்ளது என்கின்றுர்கள். சமுதாயத்தில் பெண்ணடிமை நிலை மிகையாகக் காணப்படுகின்றது என்பதை இவர்கள் உணரவில்லைப் போலும். பெண்ணிற்கு இழைக்கப்படும் அநீதியை அறியாதவர்கள் இல்லை. இருப்பினும் பெண்கள்கூட அதனைக் கருத்தில் கொள்வது பெண், தன் மகள் ஓர் பெண் என்பதை அறிந்து இருந்தும் பெண்களை இம்சைப்படுத்துவதும் போகப் பொருளாக நினைப்பதுவும் முறையல்ல. தனது மனைவி புனிதமாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றுர்களே தவிர தங்களால் களங்கப்படுபவளும் இன்னும் ஒருவனிற்குரியவள் ஓர் வீட்டில் ஓர் பெண் எவ்வளவு பொறுப்பேற்கின்றுள். எவ்வளவு பெரிய சுமைகளை ஏற்கின்றுள். ஆயினும் ஆண்கள் தாமே ஏதோ கஷ்டப்படுவதாக அலட்டிக் கொள்கின்றுர்கள்

நாட்டிற்கு நல்மக்களை பெற்றுத் தருவது ஓர் தாய்தான் அம்மக்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ரஜனியின் 'மாவீரன்' படத்தில் சிவாஜி ஏன் நடிக்கவில்லை?

'மாவீரன்' படத்தில் இருந்து சிவாஜி விலகிக் கொண்டதற்கு இதுவே காரணமாம்

ரஜனிகாந்தின் 'மாவீரன்' படத்தில் சிவாஜி கணேசனும் நடிப்பதாக இருந்தது. அதையடுத்து 'மாவீரன்' விளம்பரங்களில் சிவாஜியின் உருவமும் வெளியானது.

பத்திரிகைகள் பரபரப்பாக எழுதின. ரஜனியின் தந்தையாக சிவாஜி கணேசன் நடிப்பதாகவும் அவை குறிப்பிட்டன.

இந்த வேளையில் 'மாவீரன்' படத்தில் அடுத்தடுத்து நட்சத்திர மாற்றங்கள் நடந்து கொண்டே இருந்தன

இறுதியில் சிவாஜி கணேசனும் நடிக்கமாட்டார் என்ற செய்தியும் வெளியானது. ஆம். 'மாவீரன்' படத்தில் சிவாஜிகணேசன் நடிக்கவில்லை. ஏன்?

சிவாஜியே விருப்பமின்றி ஒதுங்கிவிட்டார் என்கிருர்கள். 'விடுதலை' வெளியானதைத் தொடர்ந்து ஏற்பட்ட ரசிகர்கள் மோதலே இதற்குக் காரணம் என்றும் கூறுகிருர்கள்

இந்த ரசிகர்கள் மோதல் முன்பே தொடங்கி விட்டது. 'ஜஸ்டிஸ் கோபிநாத்' படத்தில் முதல் முதலாக சிவாஜியும், ரஜனியும் இணைந்து நடித்திருந்தார்கள்.

அந்தப் படம் வெளியானபோது ரசிகர்கள் இருசாராருக்கும் இடையே பெரியமோதல்கள் ஏற்பட்டன.

'விடுதலை' வெளிவந்தவுடனும் இதே பிரச்சினை விசுவரூபம் எடுத்தது.

சென்னையில் பிரபல தியேட்டர் ஒன்றின் முன்னுல் இருந்த அலங்காரப் பந்தல் ரஜனியின் ரசிகர்களால் அடித்து நொறுக்கப்பட்டது.

சிவாஜி ரசிகர்கள் இதை சிவாஜியிடம் முறையிட, அவர் பொலீஸாருடன் தொடர்பு கொண்டார்.

ரஜனி ரசிகர்கள் பொலீஸாரினுல் 'நன்ருக' கவனிக்கப்பட்டார்கள்

இந்த மோதல்கள் இத்துடன் முடியாமல் தொடர்ந்தன.

அன்னை அபிராமி தியேட்டரின் முன்புறம் இருந்த கார் ஒன்றும் ரஜனியின் ரசிகர்களால் அடித்து நொறுக்கப்பட்டது.

இதுவே இந்தப் படத்தின் வீழ்ச்சிக்கும் ஒரு காரணமாகியது.

தயாரிப்பு: பேரின்பம்



# மண்சுமந்த மேனியர் 2

1985 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலை அரங்கில் ஒரு நாடகம் மேடையேறியது. யாழ். பல்கலைக்கழகக் கலாசாரக் குழுவின் தயாரிப்பான அந்நாடகத்தின் பிரதியைக் குழந்தை சண்முகலிங்கம் எழுதியிருக்க. க. சிதம்பரநாதன் நெறியாள்கை செய்திருந்தார். 'அந்நாடகத்தின் பெயர் மண் சுமந்த மேனியர்' இதுகிராமம்,நகரங்களில் 60 தடவைகள் மேடையேறியது ஆயிரக்கணக்கானேர் அதனைப் பார்த்தனர். அது மக்களிடம் பெற்ற வரவேற்பைக் கொண்டு அதன் வெற்றியை உறுதிப்படுத்தலாம்.

இப்பொழுது அந்நாடகத்தின் இரண்டாம் பகுதி (மண்சுமந்த மேனியர்-2) மேடையேறி வருகிறது.

கலாசார நிகழ்வும் மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றும். ஒரு கருத்து மக்களைப் பற்றிக் கொள்வதற்கு கலாசார நிகழ்வுகள் அதிகமாகவே துணை செய்கின்றன. அது மனிதனைப் பண்படுத்துகின்றது. வளப்படுத்துகின்றது ஒரு தனிமனிதனின் கீதங்களை, மகிழ்ச்சிப் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கும் எமது மக்களுக்காகவே' இந்நாடகம் மேடையேற்றப் படுகின்றது என இந்நாடகத்தின் ஆரம்ப ஏடுகள் சொல்லுகின்றன. மேலும் 'நீதியும் சமாதானமும் புதியதான ஒரு சிந்தனைப் பாதையும்




ஆளுமையை வளர்த்தெடுக்கும் அதே நேரம் அதன் மூலமாக ஒரு குழுவின், படையின் ஆளுமையைக் கூட அது வளப்படுத்துகின்றது. கலாசார நிகழ்வுகள் அடிநிலை மக்களைச் சென்றடைந்து அவர்களை வெறுமனே உணர்ச்சிவசப் படுத்தாமல் போராட்ட உணர்வு உள்ளவர்களாக மாற்ற வேண்டும்.

'எல்லா இடங்களிலும் தங்கள் அடிமைப்பாடல்களை, ஒப்பாரிகளை, சோக இவையே எமது வேண்டுதலாகும்' என இந்நாடகம் சொல்வதனைக் காணலாம்.

இந்நாடகத்தின் அடிக் கருத்து 'மனிதன் எனும் ஓர் இனம் எழுந்து வந்து அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்' என்பதே ஆகும். இச் செய்தி நாடகம் முழுவதும் விரவி வருவதனைக் காணமுடிகிறது. இந்நாடகத்தின் இசையை கண்ணன்கவனிக்கின்ருர்.

"சிந்து"



## நடிகை சகோதரிகளின் இவ்வருட இலட்சியம்

தமிழ்த் திரையுலகின் அதிகமான நடிக, நடிகைகள் மலையாளம், கன்னடம், தெலுங்குமொழி பேசுபவர்களே.

அவர்களில் அதிகமானேர் படங்களுக்கு சொந்தக்குரலில் 'டப்பிங்' கொடுப்பது இல்லை. பிறரின் குரலே 'டப்பிங்' செய்யப்படுகிறது.

முன்னணி நடிகைகளான சகோதரிகள் அம்பிகா, ராதா - இருவரும் மலையாளமொழி பேசுபவர்கள்.

அவர்களின் படங்களிலும் பிறரின் 'டப்பிங்' குரல்தான் பதிவு செய்யப்படுகின்றன.

இப்பொழுது இவர்கள் தமிழைக் கற்றுக் கொண்டு விட்டதால், சொந்தக்குரலிலேயே படங்களுக்கு 'டப்பிங்' கொடுக்க விரும்புகிருர்கள்.

இது பற்றி அம்பிகா சொல்கிருர்:

'நானும் ராதாவும் படத்தில் பேசித்தான் நடிக்கிறேம் தயாரிப்பாளர் அதை எடுத்து விட்டு, 'டப்பிங்' குரல் கொடுத்துவிடுகிருர்கள்.

எங்களுக்கு சொந்தக் குரலில் 'டப்பிங்' கொடுக்க ஆசைதான். ஆனுல் நேரம் ஒத்துழைக்க மாட்டேன் என்கிறது.

சொந்தக்குரலில் 'டப்பிங்' கொடுப்பதை நானும் ராதாவும் இந்த ஆண்டு ஒரு சபதமாகக் கொண்டு இருக்கிறேம்' என்றுர்.

## திரை உலகில்

பாடல் எழுதி இசையமைத்துத் தரும்படி கேட்டு டி. ராஜேந்தரை மொய்த்தவண்ணம் இருக்கிருர்கள் படத் தயாரிப்பாளர்கள்.

★

சில்க் ஸ்மிதா இப்போதெல்லாம் அதிக சிடுசிடுப்புடன் காணப்படுவதில்லை. குழந்தைகளை அருகில் அழைத்து அன்புடன் பேசுகிருர். இல்லறத்துக்கு பக்குவமாகத் தயாராகி வருகிருர் என்கிருர்கள்.

★

சிவகுமார் — ராதிகா நடிக்கும் மனிதனின் மறுபக்கம் கே. ரங்கராஜ் டைரக்‌ஷனில் கன்னடத்திலும் தயாரிக்கப் பட்டுள்ளது. அதில் ராதாவுக்கு ஜோடி விஷ்ணுவர்த்தன்.

★

டைரக்டர் மணிரத்னம் படப்பிடிப்பின் போது யாருடனும் பேச மாட்டார். படப்பிடிப்பு [illegible] பார்.

## நடிகை சாதனு எம். ஜி. ஆரின் ரசிகையாம்

பிரபல தெலுங்குப்பட நடிகை ரமாதேவியின் பேத்தி சாதனு.

இவர் பள்ளியில் படிக்கும்போது சிவாஜியின் 'ஹிட்லர் உமாநாத்' 'படத்தில் நடித்து தமிழ்த் திரையுலகுக்கு அறிமுகமானுர்.

சாதனு முதன் முதலில் கதாநாயகியாக நடித்த படம் 'நெஞ்சத்தை அள்ளித்தா'. ஆனுல் விசுவின் 'வாய்ச் சொல்லில் வீரனடி' படம்தான் இவரைப் பிரபல்யப்படுத்தியது.

அதைத் தொடர்ந்து இவர் தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி என்று சுமார் இருபத்தைந்து படங்களில் நடித்துவிட்டார்.

சாதனு தமிழக முதல்வர் எம் ஜி. ஆரின் பரம ரசிகையாம். அவரது படங்களில் வரும் சண்டைகளை வெகுவாக ரசித்துப் பார்ப்பாராம். அண்மையில் டி. வி. யில் எம். ஜி ஆரின் படம் ஒன்றைப் பார்த்துவிட்டு அதே நினைப்பில் இருந்தாராம்

### ராஜேந்தரின் மாற்றம்

டி. ராஜேந்தர் இது வரை வெளிப்படங்களில் நடிக்க ஒப்புக் கொண்டது இல்லை,

முதல் முறையாக 'மனக்கணக்கு' தயாரிப்பாளர் ஜே. மஞேகர் தயாரிக்கும் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிருர். அத்துடன் இசை, வசனம், பாடல்களும் இவரே!

## 'பயணங்கள் தொடர' ரசிகர்கள் ஆதரவு தேவை

வீட்டுக்கு வீடு வீடியோ பெட்டிகள் பெருகிவிட்ட இக்காலத்தில், இந்திய சினிமாவின் பாதிப்புக்குள் தமிழ் ரசிகர்கள் மூழ்கி விட்ட நேரத்தில், எமக்கென்ற கலை கலாசாரப் பண்புகளுடன் வீடியோ தயாரிப்புக்கள் செய்ய வேண்டிய ஒரு முனைப்பான சூழ்நிலை உருவாகி உள்ளது.

இந்த வகையில் கவிஞர் ஜீவா நாவுக்கரசனின் 'பயணங்கள் தொடர்கின்றன' வீடியோ தயாரிப்பு ஒரு நம்பிக்கையைத் தருகிறது.

அவரது முதல் முயற்சியான 'தியாகச்சுடர்' தந்த படிப்பினைவிட இது கலையுலகத்தில் அதிக பயன்தரும் என்று நம்பலாம்.

ஒட்டுமொத்தமாக இப்படத்தில் குறைகள் இல்லாமல் இல்லை.

தொழில்நுட்பத் துறையில் நாம் வசதிகுறைந்தவர்களாகவே உள்ளோம். இதனுல் தொழில்நுட்பத் தவறுகளை ரசிகர்கள் மன்னிக்கத் தயாராகவே உள்ளனர்.

சீதனப் பிரச்சினை, சாதிப்பிரச்சினை, வெளிநாட்டுமோகம், போராளிகள் பெருமை போன்ற பல விடயங்கள் அம்சங்கள் படத்தில் விரவி நிற்கின்றன.

எல்லாவற்றையும் காட்டாது ஏதாவது ஓர் அம்சத்தை மட்டும் நுணுக்கமாகக் காட்டியிருக்கலாம்.

பல கதாபாத்திரங்கள் முழுமையாக்கப்படவில்லை. சம்பவங்களுக்கான காரணங்கள் வலிதாக்கப்படவில்லை.

பொன்னுத்துரையின் இசையில் இரு பாடல்கள் மிக நன்ருக உள்ளன.

மூலக்கதையை பொறுத்தவரையில் மனைவி சோரம் போவதை ஒரு விபத்தாகக் காட்டியிருக்கலாம். இல்லாவிடில் குழந்தைகளை காப்பகத்தில் விட்டுவிட்டு வேலைக்குச் செல்வது போல், மனைவியரையும் பெண்கள் காப்பகத்தில் விட்டுவிட்டே கணவன்மார் வெளிநாடு செல்ல வேண்டிவரும்.

இன்றைய நெருக்கடியான இச்சூழ்நிலையில் இப்படி ஒரு படத்தை சிரமங்களின் மத்தியில் எடுத்த 'ஆனந்தால'யத்தார் பாராட்டுக்குரியவர்களே.

தமிழ்ப்பட ரசிகர்கள் அவர்களுக்கு கொடுக்கும் ஆதரவு நிச்சயம் அவர்களது 'பயணங்கள் தொடர' வழிவகுக்கும்.

—ரட்ணு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இறைவனுக்காக கர்மம் செய்யும் மனிதன் மேலோன் ஆகின்றான்

ஸ்ரீமத் பகவத்கீதை வாழ்க்கைத் தத்துவத்தை வெளிப்படுத்தும் ஓர் அரிய நூல். ஆதிசங்கரர் கீதைக்கு ஒரு சிறப்பான பாஷ்யம் அமைத்துள்ளார். பதினெராம் அத்தியாயத்தின் இறுதிச் சுலோகம் கீதையின் சாரத்தைப் பெரிதுபடுத்துகிறது என்று சங்கரர் பகர்ந்துள்ளார்.

'பாண்டவா, எனக்காகக் கர்மம் செய்கிறவனும், என்னைக் குறியாகக் கொள்கிறவனும், என்னிடத்து பக்தி பண்ணுபவனும், பற்றற்றவனும், எல்லா உயிர்களிடத்தும் வெறுப்பற்றவனும் எவனோ அவன் என்னை வந்தடைகிறான்'

(அத்தியாயம் 11. சுலோகம் 55)

கர்மம் செய்யாமல் மனிதன் வாழ முடியாது. மனிதன் செய்யும் கர்மம் அவனது தன்மையை வெளிப்படுத்துகின்றது. இறைவனுக்காக கர்மம் செய்பவன் மேலோன் ஆகின்றான். பற்றற்றுக் கர்மம் செய்யச் செய்ய மனது தூய்மை அடைகிறது. மனது தூய்மையடையத் தியானம் கைகூடுகிறது. இதனால் தான் சுவாமி விவேகானந்தர் 'துறவிகள் மக்களுக்காக நிறையப் பணிபுரிய வேண்டும். காலையிலும் மாலையிலும் தியானம் அவசியம்' என்று வலியுறுத்தியுள்ளார்.

கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கர்மயோகம், பக்தியோகம், ஞான யோகம் என்ற மூன்று யோகங்களையும் முறையே ஆறு ஆறு அத்தியாயங்களில் குறிப்பிடுகின்றார். கீதையில் 18 அத்தியாயங்கள் உண்டு. 700 சுலோகங்கள் அமைந்துள்ளன.

கர்மத்தின் மகிமையையும் சிறப்பையும் மூன்றும் அத்தியாயத்தில் மூன்று சுலோகங்கள் மூலம் தெளிவுபடுத்துகின்றார். 'பார்த்தா! மூவுலகிலும் எனக்குக் கடமையேதும் கிடையாது. அடையாத ஒன்றை இனி அடைந்தாக வேண்டும் என்பதும் இல்லவே இல்லை.

### "சுவாமிஜி"

ஆயினும் கர்மம் செய்து கொண்டே இருக்கின்றேன்.

அர்ஜுனா! நான் அயர்வின்றி எப்பொழுதும் கர்மத்தில் ஈடுபடாவிடில் மனிதர்கள் என் வழியையே பின்பற்றுவர்.

நான் கர்மம் செய்யாவிட்டால் இவ்வுலகங்கள் அழிந்து போம். ஜாதிக் கலப்புக்கும் நானே கர்த்தாவாய் மக்களைக் கெடுத்தவன் ஆவேன்.'

அன்னை ஸ்ரீ சாரதா தேவியை ஸ்ரீராமகிருஷ்ணர் எப்பொழுதும் செயலில் ஈடுபடும்படி வற்புறுத்துவார். சாரதா தேவியும் அடியார்களை நோக்கி 'வேலையற்றுச் சும்மா இருக்கக் கூடாது. கர்மத்தின் மூலம் கர்ம பந்தத்தை நீக்கலாம். வேலையற்று இருக்கும் மனத்தில் பல எண்ணங்கள் தோன்றும்' அன்னை தான் உலகிடை வாழும் வரை என்றும் பணி புரிய வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார். உலகிடை வாழ்ந்த மகான்கள், சமய குரவர்கள் யாவரும் பணி புரிந்து தம் வாழ்நாளைக் கழித்தார்கள். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது அப்பர் வாக்காகும்.

கீதையில் மீண்டும் இறுதி அத்தியாயத்தில் 11 ஆம் சுலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். 'உடலெடுத்தவனுக்குக் கர்மங்களை அறவே விடுவது இயலாது ஆனால் வினைப் பயனைத் துறந்தவன் எவனோ அவன் தியாகி எனப்படுகிறான்'

கர்மம் செய்ய வேண்டும். இறைவனைக் குறியாகக் கொண்டு பற்றற்றுக் கர்மம் செய்வதால் மீண்டும் பந்த பாசங்களில் சிக்கும் வாய்ப்பை நீக்கி விடலாம். இறைவனை மறந்து மனிதன் அகங்காரம், மமகாரம் கொண்டு கர்மம் செய்வதினால் மீண்டும் பிறப்பு, இறப்புக்கு ஆளாகின்றான். இதையே தான் திருவள்ளுவப் பெருந்தகையார்

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்' என்றார். கீதையின் கர்மயோகம் மனிதனுக்கு உய்ய வழி காட்டுகிறது.

## கண்ணீருக்கு மருத்துவ சக்தி

கண்ணீருக்கு பல 'ஆன்டி செப்டிக்' மருந்துகளுள்ள கிருமிநாசினிச் சக்தி இருக்கிறது. ஒரு தேக்கரண்டி அளவு கண்ணீரை ஒரு லீட்டர் தண்ணீரில் விட்டுக் கலந்தால் அந்த நீருக்கு மூட்டுப் பூச்சிகள் அழிக்கும் சக்தி வந்துவிடும் என்று ஆராய்ந்து அறிந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் நமக்கு ஒரு விரல் கடையளவு கண்ணீர் உற்பத்தி ஆகிறது. இந்தக் கண்ணீர் நோய்க்கிருமிகள் புகாதவாறு எதிர்த்து காத்து கண்ணைக் கழுவி எப்போதும் பிரகாசமாக வைத்திருக்க உதவுகிறது.

ரஷ்யர்கள் இரண்டாம் உலகப் போரின் போது அல்சரையும் கட்டிகளையும் குணப்படுத்த கண்ணீரையே மருந்தாகப் பயன்படுத்தினார்கள்.

பல ஆன்டி செப்டிக் மருந்துக்கள் நாட்பட நாட்பட வீரியம் குறைவதை காண்கிறோம். ஆனால் கண்ணீர் அப்படியல்ல. அதன் நோய் எதிர்ப்புச் சக்தி எவ்வளவு நாட்களானாலும் மாறுவதில்லை. கெடுவதும் இல்லை. மனிதன் அழுவது அவனுக்கு நன்மையே பயக்கிறது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். குழந்தை பிறந்தவுடன் அது அழுகிறதா? என்பதை மட்டும் டாக்டர்கள் முக்கியமாகக் கவனிக்கிறார்கள். அழும் குழந்தையே ஆரோக்கியமான குழந்தை என்பது அவர்களுக்குத் தெரியும்.

அண்மையில் நியூயார்க்கில் அழும் குழந்தைப் போட்டி ஒன்று நடைபெற்றது. விக்கி..... விக்கிக் கண்ணீர் தரையில் கொட்டக் கொட்ட

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## முத்தமிழ்ச் சிறப்பு

# அரங்குகண்ட ஆடற்கலை அற்புத நாடகத் தமிழ்

(சென்றவார தொடர்)

ஆதியில் நாடகத் தமிழே தோன்றியது. பின்னர் இசைத்தமிழும் அதன் பின்னர் இயற்றமிழும் தோன்றின. இம் மூவகைத் தமிழும் மொழியின் இயற்கையான வளர்ச்சிப் படிகளாகும்.

உலகில் மனிதன் தோன்றி அவன் பேச அறியாத, மொழி தோன்

### பாடித் துதிக்கும் தெய்வத்தையும் ஆடும் நடராஜனைக் கண்டனர் தமிழர்

றாத காலம் ஒன்றிருந்தது, மொழி தோன்றாக் காலத்தே மக்கள் தம் கருத்துக்களை முகம், பார்வை, உடல்நிலை என் பலவைகளால் வெளியிட்டனர். ஆதியில் தமிழரிடையே சதிர் என்னும் ஓர் ஆடல் பிரபலமாகியிருந்தது. இது ஒரு கருத்தைக் கதையை ஆடல் மூலம் நடித்துக் காட்டுவதாக அமைந்திருந்தது பண்டைக் காலத்தில் சிவன் ஆடல், வேலன் ஆடல், திருமால் ஆடல் எனப் பலவகை ஆடல்கள் வழங்கின. சதிர் ஆட்டம் போன்றதாகவே இந்த ஆடல்களும் அமைந்து கொண்டன. முற்காலத்தில் நடிப்பு, நாடகம், கூத்து, துள்ளல் என்னும் சொற்கள் ஒரு பொருளுக்கே வழங்கின. பிற்காலத்தில் நாடகம் என்பது பலர் சேர்ந்து ஒரு கதையை நடித்துக் காட்டுவதை மாத்திரம் குறிக்க வழங்குவதாயிற்று.

ஒரு கருத்தை, ஒரு கதையை ஆடிக்காட்டும் ஆடலுக்குப் பின்னர் தான் கதையை நடித்துக் காட்டும் நாடகம் தோன்றிற்று தமிழரிடையே நாடகத்தமிழ் மிகப் பழைய காலத்திலேயே தோன்றி வளர்ச்சியடைந்திருந்தது. தமிழருடைய கடவுள் நடராஜன் எனப்படுகிறார். நடராஜன் என்பதற்கு நடனசபையின் தலைவன் என்று பொருள். பொழுது போக்குக் கலையாகத் தொடங்கிய நாட்டியக்கலை கடவுள் புனிதமுடையதாய் தமிழராற் போற்றப்பட்டு வருகி

**ம. க. அ. அந்தனிசில்**

றது. நாட்டியத்தின் மூலமாய் நடிக்கப்படும் கதை நாட்டிய நாடகம் எனக் கொள்ளப்படும். நாடகத் தமிழுக்கு உயிர் மெய்ப்பாடு; மெய்ப்பாடு என்பது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி மெய்யிடத்தில் தோன்றுதலாம்.

நாடகத்தமிழ் வளர்ச்சியடைந்த காலத்தில் நாடகத்தமிழ் இலக்கணங்கள் பல எழுதப்பட்டன. இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் சேர நாட்டு இளவரசன் இளங்கோவடிகளால் சிலப்பதிகாரம் எழுதப்பட்டது. அதில் அரங்கேற்றுகாதை என்னும் பகுதியில் பழைய நாடகத்தமிழ் வழக்குகள் பல காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எனும் புலவர் உரை எழுதியுள்ளார். அவர் பழைய நாடகத் தமிழ் நூல்கள் பலவற்றிலிருந்து தமது உரைக்கு மேற்கோள் காட்டியிருக்கிறார். அதன் காரணமாக முற்காலத்தில் நாடக இலக்கணம் கூறும் தமிழ் நூல்கள் பல இருந்தனவென்பதை நாம் நன்கு உணர முடிகிறது.

முற்காலத்திலிருந்தே தமிழர் நாட்டிய, நாடக கலைகளில் சிறந்து விளங்கினர். சிறுமியர் குரவை, கும்மி, கோலாட்டம் என பல ஆடல்கள் புரிந்தனர். அரசர்கள் முன்பும் தனவந்தர்கள் முன்பும் ஆடி மகிழ்விக்கும் கூத்தர் கூத்தியரும் பலர் இருந்தனர்.

பண்டைக் காலத்தில் நாடகம் நடிக்கப்படும் மேடை அரங்கு என வழங்கப்பட்டது. அரங்கேற்றம் என்பது மேடையேறுதலைக் குறிக்கும். (இன்று அரங்கேற்றம் என்பது முதன் முதல் மேடையேறுதலைக் குறிப்பதற்கு வழங்கப்படுகிறது) அற்றை நாட்களில் நாடக அரங்கு வட்டமாக இருந்தது. அதன் மீது இடப்பட்ட கொட்டில் வட்ட வடிவினது. ஓவியங்கள் வரையப் பெற்ற ஆடைகள் மேற்கட்டியாகக் கட்டப்பட்டன. அரங்கில் திரைச் சீலைகள் பயன்படுத்தப்பட்டன. திரைச் சீலைகரந்து, வரல், எழினி என்ற பெயரால் அழைக்கப்பட்டது. ஆங்கில மேதையான ஷேக்ஸ்பியரின் நாடகங்களுக்குக் கூட திரைச்சீலை பாவிக்கப்படவில்லையென்பதும்- அதற்காக அவர் காட்சியமைப்புகளின் இறுதிக் கட்டங்களைப் பொருத்தமானதாக மாற்றி எழுதியிருந்தார் என்பதும்-

தமிழர்கள் பண்டைக் காலம் முதலே நாடக மேடைகளுக்குத் திரைச் சேலை பாவிக்கத் தொடங்கியிருந்தார்களென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதிலிருந்து மிகப் பழைய காலத்திலிருந்தே தமிழர் நாடகக் கலையில் மேம்பாடுடையோராய் திகழ்ந்தனரென்பது உணரப்படக் கூடியதல்லவா?

ஆக — நாடகம், இயல், இசை என்னும் இம் மூன்று வளர்ச்சிகளும் படிமுறையே தமிழ் மக்களிடையே தோன்றி இயற்கையாக வளர்ச்சியுற்றமையினாலேயே இயல், இசை, நாடகம் எனும் வழக்கு தமிழ் மொழியில் மாத்திரம் காணப்படுகிறது உலகின் பிறமொழிகள் எதிலும் அவ்வாறில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(முற்றும்).

## காலத்தால் அழியாத வரலாற்றுக்கடிதங்கள்

### நேருவிடமிருந்து இந்திராவுக்கு

**மனிதனின் வாழ்க்கைப் போராட்டம்**

(சென்ற வாரத் தொடர்)

ஆகவே சரித்திரம் ஆதிகாலத்தைவிட்டு முன்னேறிச் செல்லச் செல்ல அதிகமாகப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு வியாபாரத்தை எடுத்துக்கொண்டு அதைச் செவ்வையாகச் செய்கின்றார்கள். பிறரிடமிருந்து பொருளைப் பெற்றுக்கொண்டு தங்களிடம் உள்ள பொருளை கொடுக்கிறார்கள் இவ்வாறு வியாபாரம் விருத்தி அடைகிறது என்று நாம் காண்கிறோம். புதியனவும் சிறந்தனவுமான போக்குவரத்துச் சாதனங்கள் வளர்ச்சியுறுவதையும் நாம் காண்கிறோம். சிறப்பாக, நீராவி இயந்திரம் வந்த பிறகு, கடந்த 100 வருடங்களில் இவை அதிகமாக விருத்தியடைந்திருக்கின்றன. பொருளின் உற்பத்தி அதிகமானால் உலகின் செல்வமும் அதிகமாகிறது ஆனால் சிலருக்காவது அதிக ஓய்வு கிடைக்கிறது. இவ்வாறாக "நாகரிகம்" என்பது தோன்றி வளர்கின்றது

இவைகளெல்லாம் சாத்தியமாகி விட்டன. நாம் வாழும் இக்காலம் கல்வி அறிவிலும் கலைகளிலும் விஞ்ஞானத்திலும் முற்போக்குடையதாக விளங்குகிறதென்றும் தற்கால நாகரிகம் சாதித்துள்ள அதிசயங்கள் பல என்றும் பலர் வாயளாவப் புகழ்ந்து சொல்லுகிறார்கள். ஆயினும் ஏழைகள் ஏழைகளாகவே இருந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; பெரியதேசங்கள் ஒன்றோடொன்று போரிட்டுக்கொண்டு கோடிக்கணக்கான மக்களைக் கொன்று குவிக்கின்றன. நமது தேசத்தைப் போன்று பெரிய தேசங்கள் இன்னும் அந்நியரால் ஆளப்பட்டு வருகின்றன. நமது சொந்த வீட்டில் நமக்குச் சுதந்திரம் இல்லாதபோது நாகரிகத்தால் நமக்கு என்ன பயன்? ஆனால் நாம் இப்போது விழித்தெழுந்து முயற்சிசெய்து வருகின்றோம்.

கிளர்ச்சி மிகுந்த இக்காலத்தில் வாழ நாம் எவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறோம்! இந்தியா மட்டுமன்றி உலகம் முழுவதுமே மாறுதலடைந்து கொண்டிருப்பதை நாம் பார்க்க முடிவதோடு இந்தப் பெரிய நாடகத்திலே ஒவ்வொருவரும் பங்கு எடுத்துக்கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கிறோம்.

நீ அதிஷ்டம் மிகுந்த பெண் ரஷ்யாவில் புது சகாப்தத்தைக் தோற்றுவித்த புரட்சி தொடங்கிய அதே வருடத்தில் நீ பிறந்ததோடு உன் சொந்த நாட்டிலேயே இப்போது நடக்கும் புரட்சியையும் பார்த்துக் கொண்டிருக்கிறாய். சீக்கிரத்தில் நீ அதில் பங்கு எடுத்துக்கொள்ளவும் கூடும்.

உலகம் முழுவதிலும் கொந்தளிப்பையும் மாறுதலையும் காண்கிறோம். கீழ்க்கோடியிலே ஜப்பான் சீனாமீது பாய்கிறது மேற்கே, ஏன் உலகமெங்கணும், பழைய முறை ஆட்டம் கொடுத்துக் கீழே விழுந்துவிடும் போலிருக்கிறது.

ஆயுதப் பரிகரணத்தைப் பற்றிப் பல நாடுகளில் பேசுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு நாடும் பிறநாடுகளின் மீது சந்தேகம் கொண்டு பூரண ஆயுத பலத்தைத் திரட்டிக் கொண்டிருக்கிறது.

*

# தமிழர் சீவியம் சிதைவு அரசு அடக்கு முறையால்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் தமிழராய்ப் பிறந்த ஒரேஒரு குற்றத்திற்காக அரச பயங்கரவாதத்தால் நித்தம் நித்தம் கொலையுண்டு வருகின்றனர். இக்காலகட்டத்தில் பொருளாதாரத் துறையில் நம்மவர்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் ஏராளம்.

விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பலவகைப்பட்ட தொழிலாளர்களும்மிகப்பெரும் பாதிப்புக்குள்ளாகி துன்பத்தின் எல்லைக்குத் தள்ளப்பட்ட நிலையில் சொல்லொணா வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவற்றுக்கெல்லாம் இன்றைய அரசும் அவர்களின் கைக்கூலிகளான படைகளுமே காரணம் என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ மாட்டார்கள்.

விவசாயப் பெருங்குடி மக்கள் தாம் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்துவந்த விளை நிலங்களை விட்டு அடித்துத் துரத்தப்பட்டு அகதிகளாக அகதி முகாம்களிலும் தனியாரிடங்களிலும் தஞ்சம்புகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இன்றும் பலர் தெருத் தெருவாக அலைந்து பிச்சையெடுக்கிறார்கள்.

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலே அறுவடை செய்து குடுமிதிக்க தயாராக இருந்த நெல்மணிகள் கொளுத்தி எரிக்கப்பட்டு அந்த நெருப்பிலேயே சுட்டுக் கொலை செய்யப்பட்ட அவ்விவசாயிகளையும் போட்டு எரித்துள்ளனர். சிலர் உயிருடனேயே நெருப்பில் போட்டுப் பொசுக்கப்பட்டுள்ளார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்திலே அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் வயல்கள் பல எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட மாவட்டங்களிலே தம் உழைப்புக்குப் பயன் கிடைத்தும் வாய்க்கெட்டாத நிலையில் மக்கள் படும் கஷ்டம் சொல்லவே முடியாது. அரிசி விலை அளவுமீறி ஏறுகிறது. கூலி விவசாயிகள் சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தளவில் விவசாயிகளின் விளைபொருள்கள் விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்து வசதியின்மை போன்ற காரணங்களால் விளைபொருள்கள் இங்கேயே தவங்கிடக்கின்றன. முக்கியமாக மிளகாய், வெங்காயம், பீற்றூட் என்பனவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் விவசாயிகளுக்குத் தேவையான கிருமி நாசினிகள் தட்டுப்பாட்டால் பயிர்கள், விளைபொருள்கள் எல்லாம் நோய்களின் பாதிப்பால் பாழ்பட்டுப் போயுள்ளன. புகையிலை, சுருட்டு என்பன வெளியிடங்களுக்கு அனுப்பமுடியாத நிலை தோன்றியுள்ளதால் தாம் பயிரிட்ட புகையிலையை விற்கமுடியாத நிலையில் பல விவசாயிகள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகி இருக்கின்றார்கள். கடன்பட்டு விவசாயம் செய்தவர்கள் விவசாயப் பொருள்கள் விற்பனை செய்யப்படாமல் முடங்கிக் கிடப்பதனால் தாம் விவசாயத்திற்காகப் பெற்ற கடனை அடைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதே என்ற கவலை ஒரு புறம், வாழ வழியில்லையே என்ற கவலை மறுபுறம் வாட்ட உயிரிருந்தும் உயிரற்றவர்களாக உலாவரும் [illegible] செலவு செய்த விவசாயிகள் திடீர் விலை இறக்கத்தால் ஒரு சில ஆயிரங்களை மட்டும் பெற்று நட்டமடைந்த நிலையில் ஒன்றுமே செய்யமுடியாது ஏக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மீனவ மக்கள் படும் கஷ்டம் சொல்லிலடங்காது. கடலும் கடல் சார்ந்த கரையோரப் பிரதேசங்களும் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டபின் மீனவர்கள் தொழிலிழந்த நிலையில், தங்கள் ஜீவனோபாயத்தை நடத்த முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வாழ்க்கை எனும் ஓடத்தை ஓட்டமுடியாத நிலையில் துயரக் கடலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளார்கள். பரவைக் கடலில் மீன் பிடிக்கலாம் என்று இருந்த வேளையிலும் மீன் பிடிக்கச் சென்ற பலர் கடற்படையினரால் கொடுமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். வள்ளங்கள், வலைகள் எரிக்கப்பட்டு மனித உயிர்களும் சூறையாடப்பட்ட சந்தர்ப்பங்களும் பல இடம்பெற்றுள்ளன. அண்மையில் மண்டைதீவு கடற்பகுதியில் தங்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக மீன் பிடிக்கச் சென்ற முப்பத்துநான்கு அப்பாவி மீனவர்கள் கொடூரமான முறையில் வெட்டிக் குதறிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் நின்றுவிடாமல் பரவைக் கடல்களிலும் மீன் பிடிப்பது தடை செய்யப்பட்டிருப்பதாகத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆணை பிறப்பித்துள்ளார். குடும்பத் தலைவனை இழந்த மனைவி, தனயனை இழந்த பெற்றோர், அண்ணனை இழந்த தங்கை [illegible]

(6ஆம் பக்கம் பார்க்க)

# அப்பர் சுவாமிகளுக்கும் கவிஞர் தாகூருக்கும் கூட மறுபிறப்பு ஆசை இருந்தது

(சென்ற வாரத் தொடர்)

1893 ஆம் ஆண்டு மே மாதம் ஷெலிதா என்னுமிடத்தில் தாகூர் கொஞ்சக்காலம் வாழ்ந்தார். அக்கிராமசூழல், இயற்கை வனப்பு ஆற்றின் நீரோட்டம் இவை எல்லாம் அவர் மனதைக் கவர்ந்தது. இந்த அனுபவத்தைக் கடிதமொன்றில் தாகூர் எடுத்துரைக்கின்றார்.

நட்சத்திரங்களையுடைத்த வானத்தால் சூழப்பட்ட இந்த உலகத்திலே நான் மறுபடியும் வந்து பிறப்பேனா என்ற கேள்விதான் தினமும் எனக்கு எழுகின்றது. வங்காள தேசத்திலே ஏகாந்தமான இந்த இடத்திலே அமைதியான இந்த ஆற்றின் மத்தியிலே, சாந்தம் தவழ்கின்ற இது போன்ற மனோகரமான மாலைப் பொழுதை நான் மறுபடியும் ஆனந்தமாய் அனுபவித்தல் முடியுமா? ஒருகால் முடியாமல் போனாலும் போகலாம். வேறோரிடத்தில் போய்ப் பிறக்கத்தான் நேரிடலாம். என்னுடைய மனதும் இந்த எண்ணங்களோடு பிறவாமல் வேறு நிலைவோடு அமையக் கூடும். ஆனால் இத்தகைய இன்பத்தையும் ஆறுதலையும் தான் பெறுதல் இயலாததாகும். மறுபிறப்பிலும் தான் தற்போது அனுபவிக்கும் இயற்கை வனப்பிலேயே வாழவேண்டும் என்பதில் அவர் எவ்வளவு ஆசைப்படுகிறார் என்பதை நாம் உணர்கிறோம்.

இறைவனைத் தம்முடைய உள்ளத்திலே கண்டு பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் அவனுடைய விசுவரூபத்தைத் தரிசித்த அடியவரொருவருடைய மனம் எதை நாடி நிற்கிறது என்பதையும் தெரிந்து கொள்வோம்.

கடவுளுடைய பூரண திருவருளைப் பெற்று வாழ்ந்தவர் அப்பர் சுவாமிகள். அவர் ஒரு வரம் வேண்டுகின்றார். பிறவி வேண்டாமென்று அவர் கேட்கவில்லை. பிறவி வேண்டும் என்றே அவர் வேண்டுகிறார். மிக அற்பமான புழுவாய்ப் பிறந்தால்தான் என்ன? அந்தப் புழுவுக்குள்ளும் இறைவனுடைய தெய்வ ஒளி பிரகாசிக்கத் தானே செய்யும். தான் புழுவாய்ப் பிறக்க நேரிட்டாலும் எல்லாம் அவன் செயலேயன்றி வேறில்லை என்னுள்ளும் அவனே உறைகிறான் என்

### - புத்தொளி -

பதை அந்தப் புழுவாய்ப் பிறந்த போதும் உணர வேண்டும் என்கிறார். புழுவினது உணர்ச்சியும் கடவுளுடைய திருவடிகளைத் தியானிப்பதாகவே அமைய வேண்டுமென்கிறார்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தரல்
வேண்டும்.........என்று

அப்பர் சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூரில் பாடுகிறார்.

காதலர்களுடைய ஆசை அவர்களுக்குள்ளேயே சுழன்று கொண்டிருக்கிறது. ஒருவருடைய எண்ணம் மற்றவரை விட்டு அப்பால் செல்லவில்லை. நண்பனிடத்தும் விலங்கினிடத்தும் பிறந்த அன்பிலே இந்த எண்ணங்கள் சற்று விரிவடைந்திருக்கின்றன. கலையையும் உயர்ந்த சமுகப் பண்பாட்டையும் எண்ணங்கள் தழுவி நிற்பதை தாகூர் வாழ்க்கையிலிருந்து அறிகிறோம். அப்பர் சுவாமிகளுடைய நிலையும் இதுவே. சமயமே அவரது கலையுணர்ச்சி அனைத்தையும் தழுவிக் கொண்டது. *

## அன்பு மகளிடமிருந்து அருமைத் தந்தைக்கு

எனதருமைத் தந்தையே!
அறிவேன் உங்கள்
கவலையை
ஆயினும்
ஒரே
ஒரு கணம்
என்னிலைமையையும்
சிந்திப்பீர்களா?
உங்கள் காலத்தில்
படிக்க ஆவலிருந்தும்
வசதிகளில்லாமல்
ஏழ்மையில் உழன்று
முன்னேறியதால்,
இன்று—எனக்கு
சகல வசதிகளையும்
அளித்து படிக்கச்
சொல்கிறீர்கள்.
நேற்றுவரை...!
அதற்காக முயன்றேன்.
என்ன செய்ய..?
அன்று உங்கள்
படிப்பிற்கு இடையூறாக
உணவு, உடை
பிரச்சினை தானிருந்தன.
இன்றோ...!
வீட்டிலும்
வகுப்பறையிலும்
புத்தகம் முன்னால்
திறந்திருந்தாலும்
மனமோ...!
மேலே வட்டமிடும்
ஹெலியின் சத்தத்திலும்
தூரத்திலும் பின் அருகிலும்
மாறி மாறிக் கேட்கும்
குண்டுகளிலும் லயிக்கிறதே.
என் அருமைத்
தந்தையே...!
அதைவிட நான் நன்றாக
விளங்கிக்கொண்ட
சத்தங்களில்
லயிக்கப்போகிறேன்.
நான் படிக்கவில்லையே
என கவலைப்படுகிறீர்கள்
என் அக்காவின் மகனும்,
தங்கையின் மகனும்
சந்தோஷமாக
அமைதியாகப்
படித்து முன்னேற
வழியமைக்கவே - நான்
பாலமாகிறேன்

—பாலப்பிரியா—

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வைரஸினல் வரும் இலைச்சுருள்; வந்தபின் கட்டுப்படுத்த முடியாது

பயிர்ப் பாதுகாப்பு
மிளகாய்ப் பயிரைப் பாதிக்கும் நோய்களுள் மிகவும் முக்கியமான நோய் இலைச்சுருள் அல்லது குருமன் இது வெண் ஈ (White fly) பனிப்பூச்சி (Thrips) சிற்றுண்ணி (Mites) என்பன காவும் வைரஸினல் உண்டாகின்றது. இவற்றில் பனிப் பூச்சி தவிர்ந்த ஏனையவை இலைகளின் கீழ்ப்பாகத்திலேயே கூட்டம் கூட்டமாகக் காணப்படுவதால் இலைகளின் கீழ்ப்பாகங்களும் நன்கு நனைய நாசினி தெளிக்க வேண்டும்.

வைரஸ் நோய்கள் வந்த பின்பு கட்டுப்படுத்த முடியாதவை. ஆகையால் வருமுன் காப்பது அதி முக்கியமாகின்றது. இரசாயனங்களை நாற்றுக்கால் நிலையில் ஆரம்பித்து அறுவடை முடியும்வரை ஒரு வாரத்துக்கு ஒரு முறை பாவித்தல் அவசியம்.

**பீடைகளும் அதன் கட்டுப்பாடுகளும்**

பீடைகளும்அவற்றைக் கட்டுப்படுத்தும் இரசாயனங்களும் கீழே தரப்படுகின்றன.

சிற்றுண்ணி (Mites): சல்பா டைகபோல் காபோபீனோதயன்

பனிப்பூச்சி; பெனிதியன் காபறில் பிறிமிபொஸ் - மீதைல் ஒக்சிடிமெற்றன் - மீதை:

வெண் ஈ (White fly) டைமெ இயோயேற் டிமெற்றல் - மீதைல், பெனிதோயேற், பொஸ்பாமிடன், ஒமெதோயேற்.

காய் துளைப்பான் (Pod Borer) மொனுகுரெட்டொபொஸ், மெதாமடோபொஸ், புறபினேபொஸ், சைபேமெதறின், பென்வலறேற், குவனல்பொஸ், குளோரபைரிபொஸ்.

செதில் பூச்சி அழுக் கணவன் (Scats aphilles mealy bugs)

பிரதான பீடைக் கட்டுப்பாட்டுக்குப் பாவிக்கும் இரசாயனங்கள் இவற்றைக் கட்டுப்படுத்தும்.

Spodoptera Exiqura: காபோபியூரன் மணிகள், டயசினன், குவினல்பொஸ், புறபினேபொஸ், சைபேர் மெதிறின், பெனவல்றேற்.

## மிளகாய் பூத்த 5 வாரங்களில் பழம் அறுவடை செய்யலாம்

பிரயோக அளவு: தயாரிப்பாளரின் சிபார்சு செய்யப்பட்ட அளவு.

பூஞ்சண நோய்கள் நிலவும் வெப்பம், ஒளி, ஈரப்பதன், போசணை, சூழல், பயிர்ச்சுகாதாரம் ஆகியவற்ருல் பெரிதும் பாதிக்கப்படுகின்றன மேலும் இந்நோய்கள் வெகுவிரைவில் பரவுவதால் நோய்களின் தாக்கம் கண்டமாத்திரமே பூஞ்சணநாசினி தெளித்தல் அவசியம்.

**நோய்களும் அதன் கட்டுப்பாடும்**

| நோய் | இரசாயனங்கள் | அளவும் கலவையும் |
|---|---|---|
| காறை அழுகல்- | மொறட் | 5 கிராம் 2 கலன் நீர் |
| | பென்லேட் | 5 கிராம் |
| | அல்லது | |
| | பொமசல் போடே | 14 கிராம் 1 கலன் நீர் |
| | பென்லேட் | 3 கிராம் |
| | அல்லது | |
| | ரெறக்லோர் | 1 அவுன்ஸ் - 2 கலன் நீர் |
| நுனிகருகுதல் | சீ ஓ சீ | |
| அந்திரக்னோஸ் | அல்லது கோசைட் | 1 அவுன்ஸ்-கலன் நீர் |
| இலைக்கரும்புள்ளி | டைபோலதான் | 1 அவுன்ஸ்-2 1/2 கலன் நீர் |
| | மன்சேட்டி, டைதேன் எம் 45 | |
| | மங்கோ செப் | 1 அவுன்ஸ்-3 கலன் நீர் |
| | டைகோனில் | 1 அவுன்ஸ் - 3 கலன் நீர் |
| வெண்தூம் நோய் | சல்பர் | 1 அவுன்ஸ் - 2 கலன் நீர் |

வருடா வருடம் மிளகாய்ச செய்கையில் அதிகரித்து வரும் பூஞ்சண நோய்களைக் கட்டுப்படுத்த ஒரே நிலத்தில் கத்தரி, உருளைக்கிழங்கு, புகையிலை, தக்காளி, மிளகாய் ஆகிய ஒரு குடும்பப் பயிர்களை திருப்பித் திருப்பி பயிர் செய்யாது மாற்றுக் குடும்பப் பயிர்களை சாகுபடி செய்வதால் நிலத்திலிருந்து பரவும் பூஞ்சண நோய்களை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

**பூத்தலை அதிகரிப்பதும் பூக்கள் விழுவதைக் குறைப்பதும்**

மிளகாய்ப் பயிரில் பூக்கும் பூக்கள் யாவும் பழங்களாக மாறுவதில்லை. இவற்றுள் சுமார் 11 - 16 வீத பூக்கள் மட்டுமே அறுவடை செய்யக்கூடிய பழங்களாக மாறுகின்றன.

மேலும் பூப்பதில் தாமதம், குறைவான பூ எண்ணிக்கை, குறைவான பழங்கள், பூக்கள் கொட்டுதல்முதலியன சிபார்சு செய்யப்பட்ட அடிக் கட்டுப்பசளை பாவிக்கத் தவறுவதாலும், தவறான உரங்களைப் பாவிப்பதாலும் வருவனவாகும். உதாரணமாகக் குழை அல்லது ஓலை தாட்டபின் என் பி. கே மிளகாய்க் கலவையைப் பாவிக்காது, யூறியாவை மாத்திரம் அல்லது ரி. டி. எம் கலவையைத்தொடர்ந்து பாவித்தால் (பொஸ்பரஸ் குறைபாட்டினை

**கமம் புலம்**

ஏற்படுத்தும்) மேற்கூறிய குறைபாடுகள் ஏற்படும். சிபார்சுக்கு மேலாக சல்பர் பாவிப்பதாலும் பூக்கள் கொட்டுதல் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இவற்றைவிட பயிர்ச் சிராக்கிகளின் (growth regnlators) உபயோகம் பல நாடுகளில் பலவேறுபட்ட பயிர்களில், தாவர வளர்ச்சி, பூக்கள் தோற்றுதல், பழங்கள் உண்டாதல், அதன் தரம், உலர் பொருள் அளவு, வெல்லம், அசுக்கோப்பிக்கமிலம், விற்றமின்கள் என பனவற்றை அதிகரித்து பூக்கள், பழங்கள் உதிர்தலைக் கட்டுப்படுத்தி விளைவைக் கூட்டியுள்ளதாக ஆதாரங்கள் பல உண்டு.

தாவர வாழ்க்கையில் உள்ள எல்லா நடவடிக்கைகளையும் ஒட்சின் கட்டுப்படுத்துகின்றது. வெப்பம், ஒளி, ஈரப்பதன், போசணை, சூழல் காரணிகளினுல் ஒட்சின் வாயுவின் வினைத்திறன் பாதிக்கப்படும். தாவர வளர்ச்சிச் சிராக்கிகள் முக்கிய ஒட்சின்களை வழங்குகின்றன.

இன்று எமது மிளகாய்ப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு பிளேனோ

**தாயகம்**

பிக்ஸ் (Planofix) என்ற naphathalane Acetie Acid டை மூலப் பொருளாகக் கொண்ட பயிர்ச் சிராக்கி பூத்தலை அதிகரிக்கவும், பூக்கள் விழுவதைத் தடை செய்யவும் விளைச்சலை அதிகரிக்கவும் உதவும்.

**பிளேனோபிக்ஸ் பாவிக்கும் அளவும் முறையும்**

1. மி. லீ. பிளேனோபிக்ஸை 4 . 5 லீட்டர் நீரில் கலந்து பூ மொட்டு அரும்பும் பருவத்தில் முதல் முறையாகப் பயிர் நன்கு நனையும் வரை (plant drip) விசிற வேண்டும். இரண்டாவது தடவையாக 20-30 நாட்களுக்குப்பின் விசிறவும். இதனுல் நல்ல தரமான பழங்களையும், அதிக விளைச்சலையும் பெறலாம்.

முக்கியகுறிப்பு: பிளேனோபிக்ஸ் உடன் வேறு இரசாயனங்களுடன் கலந்து விசிறுதல் தவிர்க்கப்படல் வேண்டும். அத்துடன் மாலையில் சூரிய வெப்பம் குறைந்த வேளையில் விசிறினுல் பிளேனேபிக்சின் முழுப்பயனையும் பெறலாம்.

(7ஆம் பக்கம் பார்க்க)

க. தேவசபை, ஆராய்ச்சி உத்தியோகத்தர்
விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி.

# சாங்கோ பாங்கோ அடிகளின் வியாகுல பிரசங்கம் மகத்தானது

பூலோகத்தில் மாபெரும் புகழ்பெற்ற வரும் பூதவுடல் அழியாத புனித வரம் பெற்றவரும் கத்தோலிக்க திருச்சபையில் கீர்த்தியுடையவருமான புனித பிலிப் நேரியாரின்— தியானப் பிரசங்கியார் சபையைச் சேர்ந்தவர் யாக்கோமே கொன்சால்வேல் என்னும் இயற் பெயரையுடைய சாங்கோ பாங்கோ சுவாமிகள்.

29 வயதில் இலங்கை வந்து 37 வருடங்கள் மிகச் சிறந்த அப்போஸ்தலிக்க தொண்டு புரிந்து 66 வயதில் 17-7-1742 இல் அமரரானுர்.

சாங்கோ பாங்கோ சுவாமிகள் தலைசிறந்த தர்க்கப் பிரசங்கியாராகவும், ஒல்லாந்த ஆட்சிக் காலத்தில் - அதாவது வேதகலாபனைக் காலத்தில் - கிறீஸ்த மறைபரப்பும் உயர்ந்த ஒளிச்சுடராகவும் திகழ்ந்தார்.

தமிழ், சிங்கள, ஒல்லாந்த போத்துகேய மொழிகளில் நாற்பதிற்கும் மேற்பட்ட நூல்களை இவர் எழுதியுள்ளார். தமிழ்தெரியாத கிறீஸ்தவ மிசனரிமாருக்குப் பெரும் உதவி புரியும் வகையில் போர்த்துக்கேய - ஒல்லாந்த மொழிகளில் தமிழ் அகராதி ஒன்றையும் உருவாக்கிய பெருமையும் இவருக்குண்டு.

அக்காலப்பகுதிகளில் அச்சக வசதிகள் அற்றபடியினுல் சாங்கோ பாங்கோ சுவாமிகள் அயராத முயற்சி எடுத்துத் தமது நூல்களையும் அகராதியையும் பல கையெழுத்துப் பிரதிகளாகத் தயாரித்து வெளியீடு செய்தார்.

இதற்காக அவர் தொடர்ச்சியாகப் பல நாட்கள் தூக்கமின்றிச் செயலாற்ற வேண்டியிருந்ததை அவரது வரலாற்றில் விசேஷமாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இன்று இலங்கையில் தமிழ், சிங்கள கத்தோலிக்கர் அனைவரும் உபயோகிக்கும் ஜெபப் புத்தகங்கள் அனைத்துமே அவரால் எழுதப்பட்ட நூல்களின் ஆதாரமாக அமைந்தவையே! அவர் எழுதிய நூல்களில் சில ன்இனமும் பாவனையில் உண்டு.

சுவிசேஷ விருத்துரை, கத்தோலிக்க வேதாகம சங்ஷேபம், சிந்துப் பிரார்த்தனை, வியாகுல பிரசங்கம் அல்லது பசாம் ஆகியன கிறீஸ்தவ மக்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருவதுடன் பாவனையிலும் இன்றுவரை உண்டு

**யாக்கோமே கொன்சால்வேல் என்னும் சாங்கோ பாங்கோ சுவாமிகள் பரமபதம் அடைந்த 244 வது ஆண்டு நினைவையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது. இம்மாதம் 17 ஆம் திகதி அவரது நினைவு தினமாகும்**

**பத்தாவத்தை ராஜன்**

வியாகுல பிரசங்கத்தை எம்மதத்தவர் வாசித்தாலும் கிறிஸ்து நாதரின் திருப்பாடுகளை தரிசித்த அனுபவத்தையே அடைவர். மெய்சிலிர்க்க வைக்கும் இவரது வசன நடையில் கூட பக்திப்பரவசம் வரிக்கு வரி தென்படும்.

சாங்கோ பாங்கோ சுவாமிகள் நோயாளரையும்பசாசின்துன்புறுத்தல்களுக்கு இலக்கானேரை ஆசிநீர் மூலம் பூரண குணப்படுத்தும் வல்லமை இறையருளால் பெற்றவர்.

அவரைக் கொலை செய்ய முயன்றவர்களுக்குக்கூட அற்புதம் செய்து உயிர் தப்பும் ஆற்றல் பெற்றிருந்தார்.

17-7-1742 இல் இவர் பரகதி அடைந்தார்.

இவரது மரண ஊர்வலம் பல்லாயிரக்கணக்கான மெழுகுவர்த்திகளால் அலங்கரிக்கப்பட்ட பாடையில் நடத்தப்பட்டது.

சிலாப மறைமாவட்டத்தில் உள்ள போளவத்தை ஆலயத்தில் அவரின் கல்லறை இன்றும் இருக்கின்றது. *

**சோதிட சஞ்சீவி**

## இரகப்பார்வையில் வருகிற வாரம் நாட்டு நிலை

| திகதி கிழமை | பிரச்சினை ஏற்படக்கூடிய இடங்கள் | பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள் |
|---|---|---|
| 20-7-86 ஞாயிறு | வடமாகாணம், வடமத்திய, வடமேல், மேற்கு, தெற்கு மாகாணங்கள், பொதுவாக இலங்கையடங்கலும் மப்பு, மந்தாரமாக இருக்கலாம் சில இடங்களில் இடைக்கிடை மழை பெய்யலாம். | ரோகிணி, மிருகசீரிடம், பூசம். ஆயிலியம், பூராடம். |
| 21-7-86 திங்கள் | வடமாகாணம், வட கரையோரப் பகுதிகள் (இரவில்) | மிருகசீரிடம், ஆயிலியம், உத்தராடம். |
| 22-7-86 செவ்வாய் | பொதுவாக அமைதி நிலவும். தெற்கு மேற்கு மாகாணங்கள் (இரவில்) | திருவாதிரை, புநர்பூசம், மகம், பூரம், திருவோணம். |
| 23-7-86 புதன் | பொதுவாக அமைதி நிலவும். மேல் மாகாணம் (காலையில்) | புநர்பூசம், பூசம், பூரம், உத்தரம், அவிட்டம். |
| 24-7-86 வியாழன் | பொதுவாக அமைதி நிலவும் வட மாகாணம் (முற்பகலில்)மலையகம்(இரவில்) | பூசம், ஆயிலியம், உத்தரம், அத்தம், சதயம். |
| 25-7-86 வெள்ளி | மத்திய மாகாணம், மலையகம் | ஆயிலியம், மகம், அத்தம், சித்திரை, பூரட்டாதி |
| 26-7-86 சனி | பொதுவாக அமைதி நிலவும். வட மாகாணம், வடகரையோரப் பகுதிகள் (இரவில்) | மகம் சித்திரை, சுவாதி, பூரட்டாதி, உத்தரட்டாதி. |

-இறையருட்செல்வன்

## அருமருந்து-

(3ஆம் பக்கத் தொடர்)

வணக்கத்திற்குரிய மார்க்கண்டு சுவாமிகளைச் சுவாமிகளின் முன்னிலையில் சந்திக்க நேர்ந்தது. மார்க்கண்டு சுவாமிகளை முன்பு ஒரு நாளும் கண்டதில்லை. இருவரும் ஒரே பஸ்ஸில் சென்றேம். இருவரும் வெவ்வேறு பஸ் தரிப்பு இடத்தில் இறங்கி சுவாமிகள் முன்னிலையில் சந்தித்தது முதல் தடவையாகும். மார்க்கண்டு சுவாமிகள் சிவயோக சுவாமிகளை வணங்கி விடை பெற்றூர் சிவயோக சுவாமிகள் என்னைப் பார்த்து, "இப்ப போனவர் இறைவனைத் தேடுகிறுர், நீரும் தேடிக் காணும்" என்றுர்.

சுவாமிகள் மறைந்த பொழுது யான் மிகவும் வேதனைப்பட்டேன். சில நாட்களின் பின் சந்த சுவாமியை முதன் முதலாக கனவில் கண்டேன். கண்டு சில வருடங்களுக்குப் பின்பு மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் பணிபுரியும் பொழுது செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் சந்த சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்பு கிடைத்தது

யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் 1969இல் வந்த பிறகு 1972 ஆம் ஆண்டில் இருந்து வணக்கத்திற்குரிய மார்க்கண்டு சுவாமிகளின் தொடர்பு அவர் மறையும் வரை கிடைத்தது. சுருக்கமாக தவத்திரு யோக சுவாமிகளின் பார்வை பல வழிகளில் அடியேனை இன்று ஆளாக்கியுள்ளது.

யாழ்ப்பாண மக்கள் பலர் சுவாமிகளை இருக்கும் பொழுது மதிக்கவில்லை. இது ஓர் பெரிய துர்ப்பாக்கியம். இப்பொழுதும் கூட சுவாமிகளின் கட்டளைப்படி சிவதொண்டு பலர் செய்கின்றுரா? என்ற கேள்விக்கு விடை கண்டு பிடிப்பது மிகவும் சிரமம்.

சிவ தொண்டு, சுவாமிகளின் மூச்சு.

யான் சுவாமிகளைப் பார்க்கச் சென்ற பொழுது சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்தில் பேசிய சொற்பொழிவின் முதல் இரண்டு அடிகளை கூறினுர் சிவயோக சுவாமிகள் சுவாமி விவேகானந்தரை தரிசித்து சொற்பொழிவையும் கேட்டிருக்கிறுர்

சுவாமிகளுக்கு ஸ்ரீராமகிருஷ்ண மடத்து சந்நியாசிகளிடம் ஒரு தனிப் பிரியம்.

குருநாதனின் திருவடிப் பேற்றை அடைந்ததால் யான் பேறு பெற்றேன். குருவின் பாதத்தைப் போற்றி நற்கதி அடைவோமாக.

## தமிழர்---

(5ஆம் பக்கத் தொடர்)

உழைக்க உழைப்பாளி இல்லை! உண்ண உணவில்லை!! இருக்கப் பாதுகாப்பில்லை!!! என்ன தான் செய்ய முடியும் அவர்களால்.

புகையிலை சுருட்டு என்பன வெளியிடங்களுக்கு அனுப்ப முடியாத காரணத்தால் ஆயிரக் கணக்கான சுருட்டுத் தொழிலாளர்கள் வேலையை இழந்த நிலையில் வாழ்க்கையை ஓட்ட முடியாது பட்டினிக் கொடுமையில் தவிக்கிறுர்கள்.

கைத்தொழில் நிலையங்கள் பலவற்றில் ஆள் குறைப்பு. சில நிரந்தரமாகப் பூட்டப்பட்டுள்ள நிலை. வியாபார நிலையங்கள் பலவும் இராணுவ கெடுபிடி காரணமாக நிரந்தரமாகப் பூட்டப்பட்டுள்ளன. எங்கும் வேலையில்லா நிலைமை. மக்கள் சொல்லொணுத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறுர்கள். உணவுப் பொருள்கள் தலைநகரிலிருந்து இங்கு வராத காரணத்தால் அத்தியாவசிய பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளன. தொழிலின்றி வருவாயற்ற நிலையில் [illegible] வழியின்றித் தவிக்கும் மக்கள் இவற்றை வாங்க முடியாத நிலையில் எதிர் நீச்சல் போடுகின்றுர்கள்.

'எங்கும் தட்டுப்பாடு' 'எதிலும் தட்டுப்பாடு' இந்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளை இலாபம் அடிக்கும் வர்த்தகர்களும் இன்றும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறுர்கள்.

என்ன செய்வது! விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செய நினைத்தாய்' என்று [illegible] நாமும் கேட்போமா?

## ஆணுக்கு ஒரு நீதி பெண்---

(4ஆம் பக்கத் தொடர்)

நல்லமுறையில் வளர்வதற்கும் பெண்தான் காரணம். அப்படியான பெண் ஓர் நல்ல மனநிலையில் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமானது. அப்படியான நல்ல மனநிலை அநேகமான பெண்களுக்கு தங்கள் கணவனுலேதான் ஏற்படுகின்றது.

தமிழ் பேசும் மக்களிடையேதான் பெண்ணடிமைநிலை கூடுதலாகக் காணப்படுகின்றது அதற்கு எமது பழைய கால வழக்கங்களே காரணம் படிதாண்டாப் பத்தினி என்ற காலம் முடிந்து விட்டது. காலத்திற்கு ஏற்றவாறு அக்காலத்தில் வாழ்பவர்களும் மாற வேண்டும். எமது குறுகிய எண்ணங்களால் எத்தனையோ பெண்கள் தற்கொலை செய்து கொள்கின்றுர்கள் அதிகமானவர்கள் கவலைகளாலேயே இறக்கின்றுர்கள். இவர்கள் தங்களது வாழ்நாளை மற்றவர்களுக்காகத் தியாகம் செய்தே வாழ்கின்றுர்கள். இதை ஆண்கள் ஓர் கணம் யோசிக்க வேண்டும்.

ஆண்களை ஆட்டி வைக்கும் பெண்களும் இருக்கின்றுர்கள் ஆனுல் அது ஆண்களின் சீதனம் என்னும் கொடிய நோயினுல் ஏற்பட்ட விளைவாகும். பெண்கள் அடங்கித்தான் நடக்க வேண்டும் ஆனுல் அடிமையாகவும் அடக்கு முறைக்கு அஞ்சியும் வாழக்கூடாது எல்லாப் பெண்களும் தமது உரிமையை விட்டுக் கொடுக்காமல் இருக்தாலே பெண்மை மதிக்கப்படும். பெண் அடிமைப்பட்டு இருந்தால் அந்நாடு சுதந்திர மடைந்த நாடாக இருக்க முடியாது. என்று பெண்கள் சமமாக மதிக்கப்படுகின்றனரோ அன்றே [illegible] *

## பண்டித---

(3ஆம் பக்கத் தொடர்)

பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களின் தந்தையார் சுப்பிரமணிய பிள்ளையின் சகோதரியாராவார்.

இவர் திருமணஞ் செய்யாமலே வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்தவர். இவருடைய மடியிலேறி விளையாடிப் படித்தவர்களுள் குரு மகாலிங்கசிவம் அவர்களும் ஒருவர். அவர் பரீட்சை எடுக்காத பண்டிதராய், சேர் இராமநாதன் அவர்களுடைய அபிமானத்தால் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராயிருந்த பின், கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராயிருந்து பெரும் புகழ் பெற்றவர் பரீட்சை எடுத்த பண்டிதைகள் இருவரும் தங்கள் உறவினர்கள்குடும் பங்களில் மணம் முடித்து இல்லத்தரசிகளாயினி திருந்தவர்கள்.

இப்பால் யாழ்ப்பாணத்தில் பரீட்சை எடுத்த பண்டிதர்களுள் முன்னேடியாக சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்கள் பரீட்சையில் முதற்பிரிவில் முதல்வராய்ச் சிறப்புச் சித்தியெய்தியவர் இதனையறிந்த மனேச்சர் த. கைலாசபிள்ளை அவர்கள், தமது நாவலர்

## சீன இளைஞரின் சாதனை

நீண்ட சீனப் பெருஞ் சுவரின்வழியே இரண்டாயிரத்து நூறு மைல் (3 ஆயிரத்து 400கிலோ மீட்டர்) தூரத்தை முதன் முதலில் ஓடிக் கடந்து சாதனை புரிந்திருக்கிறுர் ஓர் இளைஞர்.

கிழக்கிலிருந்து மேற்கிற்கு— இந்தத் தூரத்தை ஓடுவதற்கு 80 நாட்கள் அவருக்குப் பிடித்தன.

யான் ஜென்குவா என்ற இந்த இளைஞர் மரதன் ஓட்டங்களில் ஏற்கனவே பல சாதனைகளைப் புரிந்தவர்.

1983 ஆம் ஆண்டு ஷங்ஹங்பினிலிருந்து ஷங்காய் வரையான 1950 மைல்களை (3 ஆயிரத்து 150 கிலோ மீட்டரை) 59 நாட்களில் அவர் ஓடி முடித்தார்.

1985 செப்டம்பர் முதல் 1986 ஜனவரி வரை 110 நாட்கள் அவர் தொடர்ந்து ஓடி, ஹெயிலோங் ஜியாங்கிலிருந்து 3 ஆயிரத்து 850 மைல் (6 ஆயிரத்து 200 கிலோ மீட்டர்) தொலைவில் கிழக்குச் சீனுவில் உள்ள ஹெயினுன் தீவை சென்றடைந்தார்

ஜென்குவா தற்போது ஓடிச் சென்ற சீனப் பெருஞ்சுவர் அந்நியர் சீனுவினுள் நுழைவதைத் தடுப்பதற்காக சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. அதன் மொத்த நீளம் 3 ஆயிரத்து 700 மைல் (6 ஆயிரம் கிலோ மீட்டர்.)

## கண்ணீருக்கு

(5ஆம் பக்கத் தொடர்)

அழுத குழந்தையே இப்போட்டியில் வெற்றி பெற்றது.

அழாதவர்கள் அபூர்வம். அப்படி யாராவது இருந்தால் அவர்கள் அசாத்தியமாக தைரியசாலியாக இருப்பார்கள். அல்லது நரம்புக்கோளாறு உள்ளவர்களாக இருப்பார்கள்.

நன்றாகக் கண்ணீர் விட்டு அழுவது மனோபலம் ஏற்பட உதவும் என்றும் அழுகையை அடக்குவதுதான் மன நோய் ஏற்பட வழிவகுக்கும் என்றும் கூறுகிறுர்கள். உடலியர் நிபுணர்கள்.

தொகுப்பு:
தெய்வநாயகி
காராளசிங்கம்

சைவப் பிரகாசவித்தியாசாலையில் பெரியவர்களை அழைத்து அவர்கள் சமுகத்திலே தம் மாணுக்கனின் பெறுபேற்றைப் பாராட்டிப்பட்டு வேட்டியும் சால்வையும், இரண்டரைப் பவுண் கொண்டு செய்தமைத்த பதக்கமும் அளித்துக் கௌரவித்தார்கள்.

-வளரும் -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

## 'எய்ட்ஸ்' நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரே மருந்து

ஒருவனுக்கு ஒருத்தி - என்ற கோட்பாடுதான் "எய்ட்ஸ்" என்ற பயங்கர நோய் பரவாமல் தடுப்பதற்கு உள்ள ஒரே வழியாகும்.

இது வரையில் வேறு எந்தவொரு மருந்தும் இந்த நோயைக் குணப்படுத்தும் வகையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

பல பெண்களுடன் ஏற்படும் உறவுகள் மூலம் 'எய்ட்ஸ்' நோய் வேகமாகப் பரவுகின்றது. அதனால் ஒருவருடன் மட்டும் பாலியல் உறவுகள் வைத்திருப்பதன் மூலம் இந்தவேக நோயின் பரவும் வேகம் கணிசமான அளவு கட்டுப்படுத்தப்படும்.

இவ்வாறு ஆஸ்திரியா நாட்டின் பேராசிரியர் ஒருவர் இந்த நோயின் வைரஸ்கிருமிகள் பற்றி ஆராய்ந்து பின்னர் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். ✱

## கட்டில் மகத்துவம்

பண்டைய நாளில் கட்டிலுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார்கள். அதுமட்டுமல்ல, படுக்கையைச் சக்தியின் சின்னமாகவும் தங்கள் அந்தஸ்தின் அடையாளமாகவும் கருதினார்கள். எகிப்திய மன்னனான டியூடான் காமென் 3000 ஆண்டுகளுக்கு முன் இறந்தபொழுது அவனுக்குப் பிடித்தமான கட்டில்களையும் அவனுடன் சேர்த்துப் புதைத்தார்கள்.

அவனுக்கு மிகவும் பிடித்தமான படுக்கை தந்தத்தாலும் தங்கத்தாலும் தயாரிக்கப்பட்டிருந்தது.

படுக்கையில் மருத்துவ சக்தியுடைய படுக்கைகளும் உண்டு. இன்ன மரத்தில் அல்லது இன்ன மூங்கில் பிரம்பில் தயாரித்த படுக்கைக்கு இந்தச் சக்தி என அவர்கள் நம்பினார்கள்.

பவேரியா மன்னனான இரண்டாம் லட்விக் தனது கட்டிலை மருத்துவ சக்தி மிக்க மலை வேம்பில் மிக வேலைப்பாடுகளுடன் ஒரு கிறிஸ்தவ கோவில் போல செய்திருந்தான்.

அந்தப் படுக்கையில் தூங்கும் பொழுது தேவாலயத்தில் தூங்குவது போன்று அமைதி பெற்றதாகவும் தனக்கு இருந்து வந்த முதுகுவலி பறந்து விட்டதாகவும் அவனது வரலாறு தெரிவிக்கின்றது.

## சீதனக் கொடுமை

ஆந்திரப் பிரதேசத்தில் கடந்த ஆண்டு சீதனப் பிரச்சினையால் 154 இளம் பெண்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

ஹைதராபாத்தில் விடுக்கப்பட்ட பொலீஸ் அறிக்கைகளின்படி சீதனச் சிக்கலால் 121 பெண்கள் தற்கொலை செய்திருக்கிறார்கள். 33 பெண்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆந்திரப் பிரதேசப் பெண்கள் சம்மேளனத்தின் குறிப்பு படி கடந்த ஆண்டு 300க்கும் அதிகமான பெண்கள் சீதனப் பிரச்சினையால் உயிரிழந்துள்ளனர்.

## அமெரிக்க ஆண்களின் விருப்பம்

கல்யாணம் முடித்த அனேக அமெரிக்க ஆண்கள் தமது வாழ்வு சுதாகலமானது என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர் மீண்டும் ஒரு முறை திருமணம் செய்யச் சமயகுச் சந்தர்ப்பம் ஏற்பட்டால் தற்பொழுது மனைவியாக இருப்பவரையேமீண்டும் தாம் மணமுடிக்க விரும்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேபோல 50 வீதமான பெண்களும் தமது கணவனையே மீண்டும் அடைவதில் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர்.

சிக்காக்சோவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இதை எடுத்துக் காட்டின.

## மணிக்கூட்டை திருப்பிப்பார்

இங்கிலாந்தில் இப்பொழுது என்ன நேரம் என உங்களைக் கேட்டால் உடனடியாக என்ன செய்வீர்கள்?

'திருதிரு'வென முழிப்பீர்களா?

அல்லது கணக்குப் போடஆரம்பிப்பீர்களா?

— இரண்டுமே வேண்டாம்!

மணிக்கூட்டை தலைகீழாகப் மாற்றிப்பாருங்கள்.

அதில் தெரியும் நேரம் தான் இங்கிலந்து நேரமாகும்!

— இதில் எவ்வித தவறுமிராது! முயன்று பாருங்கள்.

## பரம ஏழையாம்

உலகம் முழுவதும் சீடர்கள் அமெரிக்காவில் ஆரிகான் நகரில் மட்டும் 3500 சீடர்கள். அவர் வசித்த ஆச்சிரமத்துக்கு 1லட்சத்து 26 ஆயிரம் ஏக்கர் நிலம். பல மில்லியன் ஹெக்டேர் அடங்கிய சாம்ராஜ்யம். விலையுயர்ந்த 91 ரோல்ஸ் ராய்ஸ்கார். ஆயுதங்கள் பாதுகாப்புக்கள் நிரப்பிய விலையுயர்ந்த ஹெலிக்கொப்டர்கள்.

இவ்வளவும் யாரிடம் உண்டு என எதிர்பார்க்கின்றீர்கள்?

உலகிலே பரமஏழை தான் எனக் கூறும் சுவாமி ரஜ்னீஷிடம் தான்! ✱

## பூரி வருகிறார்

யாழ்ப்பாணம் ஜூலை 19 கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. ஹார்டிப் பூரி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

கடந்த முறை இந்திக் கடலில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது காயமடைந்த தற்பொழுது தேறிவரும் கணபதி இந்தியாவிற்கு அனுப்பி வைப்பது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்கவே அவர் இங்கு வருகிறார். (ஈ-10)

## தாமாக இடம்எடுத்து...

(2ஆம் பக்கத் தொடர்)

னர்

குறிப்பிட்ட முதல் நாள் திரு. தம்பிப் பிள்ளைக்கு கடுமையான சுகவீனத்தைக் கொடுத்தார் பிள்ளையார். அது மட்டுமின்றி அன்றிரவு அவரின் கனவில் தோன்றி, "நான் இங்கு இருக்கும்போது வாகனத்தை எங்கு கொண்டு போகப் போகிறாய்?" என்று கேட்டார்.

மறுநாள் காலையிலே இந்த வாகனம் வாய்க்கால்தரவைப் பிள்ளையாருக்கே உரியது எனத் தீர்மானித்து விட்டதால் அவரின் கடுமையான சுகவீனம் மாறி சுகமாகி விட்டார். வாகனம் வாய்க்கால்தரவைப் பிள்ளையாருக்கே கொடுக்கப்பட்டு விட்டது. இன்னும் விநாயகரின் அற்புதங்கள் பல.

இப்படியான அருள் நிரம்பிய விநாயகரின் ஆலயம் சிறந்து விளங்குகின்றது. மேலும் இவ்விநாயகர் வீதிவலம் வரும் சித்திரத்தேர் 1963 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்த சிறந்த சிற்பாசாரிகளின் கைவண்ணத்தில் உருவாகியது. ஈழத்தில் தலை சிறந்த சித்திரத் தேர்களில் ஒன்றாக விளங்குகின்றது. மேலும் இவ்வாலயத்தில் உட்பிரகார ஆலயமாக முருகன் ஆலயம், சிவன் ஆலயம் என்பவையும் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்குப் பக்கத்தில் வெள்ளம்பாயும் பெரிய வெள்ள வாய்க்கால் ஒன்று உள்ளதால் இவ் ஆலயம் "வாய்க்கால தரவைப் பிள்ளையார்" என அழைக்கப்படுவதாயிற்று.

தினசரி ஆகம விதிப்படி பூசைகள் நடைபெறும் இவ்வாலயத்தில் விநாயகர் அடியார்களின் விக்கினங்கள் போக்கி அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். நாமும் சென்று அருள் பெறுவோமாக. ✱

## காமன்வெல்த்---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தென் ஆபிரிக்காவை எந்த வகையிலும் திருப்திப்படுத்தமாட்டாது.

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக பொருளாதாரத் தடைக்கு உடன்பட்டால் பிரிட்டிஷ் பொருளாதாரம் பெரும் அளவு பாதிக்கப்படும் என்று இரும்புச் சீமாட்டியார் காரணம் கூறி வருகிறார்.

காமன் வெல்த் அமைப்பின் வரலாற்றிலே அந்த அமைப்பு உடைந்து போகும் பேராபத்து உருவாகிவருவது தட்சர் அம்மையாரின் தலைமைக்கு ஒரு சவால் என்றே கருதப்படுகிறது.

49நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பு உடைந்து போகுமானால் பிரிட்டனுக்கு இதனால் நட்டம் ஏதும் ஏற்படப் போவதில்லை.

ஆனால் சர்வதேச அரங்கில் அதன் இடம் தன்மைக்கு இது ஒரு சான்றாக அமைந்து விடலாம்.

## விஞ்ஞானமும் மெய்ஞானமும்

ஸர் ஐசாக் நியூட்டனின் முதல் இயக்கவிதியின்படி. வேற்று விசையால் தூண்டப்படாத வரையில் நிற்கின்ற பொருள் நின்றுகொண்டேயிருக்கும் ஓடுகின்ற பொருள் ஓடிக்கொண்டேயிருக்கும்.

இதை நியூட்டன் சொன்ன காலப்பகுதி 1642-1727 க்கிடைப்பட்டது

ஆனால் மூன்றும் நூற்றுண்டைசேர்ந்த மணிவாசகர் மெய்ஞானத்தால் சொன்னது:

நடப்பன நடாஅய்.
கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறி இச்சொற்பதம் கடந்த தொல்லோன்.

17 ஆம் 18 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த ஐசாக் நியூட்டன் அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்ததை 3ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த ஔவையார் பின்வருமாறு சொல்லியுள்ளார்.

நடப்பனவற்றை நடக்கச் செய்தும் கிடப்பனவற்றைக் கிடக்கச் செய்தும் நிற்பனவற்றை நிற்க வைத்தும் செயல்படுபவன் சொற்களின் எல்லையைக் கடந்து நின்ற பழைமை மிக்கவன் இறைவன். ✱

## எங்களின் பிள்ளைகுட்டிகளைவெட்டி---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கட்டான நிலையில் ஒவ்வொரு நாளுமே மரணங்கள் நிகழலாம்.

மரணித்தவர்களை கௌரவிக்க வேண்டியது அவசியம். அதுவும் மற்றவர்களின் நல்வாழ்வுக்காக மரணித்தவர்கள், தங்கள் உயிரை அர்ப்பணித்தவர்கள் நிச்சயமாக கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். அதனை மறுத்துரைக்க எவரும் இல்லை.

ஆனால் பாவம், ஒரு நாள் வெய்யிலில் வாடி, வதங்கி, கருகிப்போய் வீதிகளையே குப்பைத் தொட்டிகளாக மாற்றி விடுகின்ற வாழைக்குட்டிகளாலும் தென்னோலைகளாலுமா அவர்களைக் கௌரவிக்க வேண்டும்? சற்றே சிந்தியுங்கள்

இன்னும் சில காலம் பொறுத்திருப்போம். காலம் வரும்போது எங்கள் வீரத்தியாகிகளுக்கு, எமது மக்கள், எழிலார்ந்த தூபிகளைக் கட்டிக் கௌரவிக்காமல் நினைவு கூராமல் விடுவார்களா?

இரண்டாம் மகாயுத்தத்தில் சோவிய நாட்டு மக்கள் தங்கள் நாட்டைக்காக்கும் பொருட்டு போராடியதில் இரண்டு கோடி மக்களுக்கு மேல் மரணமானார்கள் சோவியத்நாடு எங்களைப்போல் ஒவ்வொரு தியாகிகளின் இழப்பையும் இப்படி அனுஷ்டித்திருந்தால் அமெரிக்காவையே அச்சுறுத்தக் கூடியளவு பலம் படைத்த நாடாக மாறியிருக்கமுடியுமா? அதற்கு அவர்களின் பொருளாதாரம் தான் இடமளித்திருக்குமா?

சுதந்திர தாகத்தில் அடிப்படை, பொருளாதாரம்தான். பொருளாதார ரீதியில் தமிழர்கள் சிறப்பாக இருந்திருந்தால் இந்நிலைக்கு தள்ளப்பட்டிருக்க மாட்டார்கள். இது உலகறிந்த உண்மை. பெயரளவில் கிடைக்கும் சுதந்திரம் உண்மையான சுதந்திரம் அல்ல. பொருளாதார ரீதியில் கிடைக்கிற சுதந்திரமே உண்மையான சுதந்திரம்.

குளிக்கப்போய் சேறு பூசுவது போன்றது சுதந்திர போராட்டத்தை நடத்திக் கொண்டு பொருளாதாரத்தைச் சீர்குலைத்தலில் ஈடுபடுவது.

இன்று நாங்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டோம். முற்போக்காதிகளாக மாறிக் கொண்டு இருக்கின்றோம். என்றே கால்மாக்ஸ், லெனின் ஆகியோர் எழுதிய புத்தகங்களை தூசுதட்டி அதன் பக்கங்களைப் படிக்கத் தொடங்கி விட்டோம். இப்படியான நிலையில் மூடநம்பிக்கைகளுக்கு அடிமைப்படாமல் உண்மையான (பொருளாதார) சுதந்திரத்திற்காக பாடுபடுவோமாக. ✱


# பிரயாண ஒழுங்குகள்

✱ கனடா

✱ ஜேர்மன்

✱ பிரான்ஸ்

✱ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், விசா, பொன்ட், (BOND) ரிக்கட் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

# INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(சுவீர் சுன்னாகருலாலைப்பக்கம்)
மானிப்பாய்.


## வைரஸினுல் ஏற்படும்--

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அறுவடையும் சந்தைப்படுத்தலும்

கிரமமாக பசளையிட்டு நீர்ப்பாய்ச்சி, பயிர்ப் பாதுகாப்பு முறைகளை தவறாது கடைப்பிடித்தால் பயிர்நாட்டி 6 வாரங்களில் பூக்கத் தொடங்கும். அதன்பின் 3-4 வாரங்களில் பழ அறுவடையை ஆரம்பிக்கலாம். அத்துடன் ஒரு ஏக்கருக்கு 25-30 அந்தர் செத்தல் மிளகாயை 7முதல் 8 மாதகாலத்தில் விளைவாகப் பெறலாம். ஈரப்பசுமை அற்ற பழங்களைக்காலை வெய்யில் வந்ததும் அறுவடை செய்து பழங்களை 2 நாட்களுக்குக் குவித்து வைப்பதால் அவை ஒரேயடியாக செந்நிறமடையும். பின்பு நன்கு வெய்யிலில் பரவி உலர்த்தி 5அல்லது 6நாட்கள் காய்ந்தபின் அவற்றைப் பிரித்தெடுத்து வெவ்வேறுகத் தரப்படுத்துவதனுல் சந்தைப்படுத்தல் சுலபமாகிறது.

பழங்களை அறுவடை செய்யமுன்னர் கமக்காரர் தமக்குத் தேவையான விதையைப் பெறுவதற்காக நல்ல அம்சங்களைக் கொண்ட கன்றுகளைத் தெரிந்து, அவற்றிலிருந்து தரம் சிறந்த பழங்களைத் தெரிவு செய்து பாகுபடுத்தி சேமித்து வைத்து அவற்றை எதிர்வரும் போகத்தில் பாவிக்கும் பழக்கத்தைச் செயல்படுத்துவாராகில் நல்ல விளைச்சல்களையும், அதிக இலாபத்தையும் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. ✱

## மாகாண சபைக்கு---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கின்றன. இவ்விரண்டு விடயங்களிலும் தமிழ் மக்கள் கூடுதலான அக்கறை கொள்வது இயல்பு. இவ்விரு விடயங்கள் சம்பந்தமாகவும் திரு ஜயவர்த்தனவின் திட்டங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன விரிவாக எனினும் விளக்கமாக என்றே -தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை ஏற்றுக் கொள்வனவாகவோ அல்லது ஓரளவு தானும் ஏற்றுக்கொள்வனவாகவோ அமைந்திருக்கின்றன என்றே பொருள் கொள்ள முடியாது.

காணிப்பங்கீடு சம்பந்தமான குறிப்பு என்ற தலைப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

பாவலாக்கலுக்கான விடயப்பொருள்.

காணி, அதாவது காணியின் மீது உரிமை, காணிக்குத்தகை, காணிமாற்றம், காணி பங்கீடு, காணிச் சீர்திருத்தம் ஆகியன மாகாண சபைகளுக்குப் பரவலாக்கப்படும். எனினும் அத்தகைய பரவலாக்கல் கீழ்க்கண்ட புறநடைகளுக்கு அமைவுறும்:-

1. அரசிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகள் அரச காணிகள்)

1-2. மாகாண சபைகளிடம் பரவலாக்கப்படாத விடயங்கள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்திற்குத் தேவைப்படும் காணிகள் எத்தகைய கட்டுப்பாடுமின்றி இலங்கை அரசாங்கத்தினுல் உபயோகிக்கப்படும்.

1-3 மாகாணசபைகளுக்கு பரவலாக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக தேவைப்படும் காணிகளைப் பொறுத்தளவில், சம்பந்தப்பட்ட 'தேசிய கொள்கைகளுக்கு' அமைய அத்தகைய காணிகளின் உபயோகம் சம்பந்தமான திட்டங்களை மாகாண சபைகள் வகுக்கும் கடப்பாடுடையன அத்தகைய திட்டங்களின்கீழ் எத்தகைய காணியையும் எந்தப்பிரஜைக்குமோ அல்லது வேறு அமைப்புக்குமோ பங்கீடு செய்வதோ பராதீனப்படுத்துவதோ ஜனாதிபதியால் மாகாண சபைகளின் ஆலோசனையின் பேரில் செய்யப்படும்

1-4. இலங்கை அரசினுல் ஒரு தேசிய காணி ஆணைக்குழு நியமிக்கப்படும். அரச காணிகளின் உபயோகம் சம்பந்தமான கொள்கையை வகுக்கும் அதிகாரம் அதற்கு இருக்கும்.

காணி உரித்தில்லை

முதலாவது புறநடையின்கீழ் வரும் காணிகள் அனைத்தும் தனியார் காணி அல்லாத அரச காணியாகும். தனியார் காணிக்குள் கோயில் மற்றும் கம்பனிகள், நிறுவனங்களுக்குரிய காணிகள் அடங்கும். இவை போக மிகுதியவும் அரச காணிகளே. எனின் மாகாண சபைக்கு எங்கிருந்து காணி வரும்? மாகாணசபைக்கு சட்டரீதியான உரித்து எக்காணி சம்பந்தமாகவும் இல்லை

இலங்கை அரசின் அதிகாரங்கள் சிலவற்றை பரவலாக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதே தவிர அவ்வரசின் உரித்துக்கள் பரவலாக்கப்படவில்லை எனவே தனியார் காணிகள் தவிர்ந்த அனைத்தும் இலங்கை அரசிற்கே சொந்தமானவையாகும். மாகாண சபைகளுக்குப் பரவலாக்கப்படும் அதிகாரங்களை அமுல் செய்ய தேவைப்படும் காணிகளைக்கூட மாகாணசபைகள் ஜனாதிபதியிடமிருந்தே பெறவேண்டும். புறநடை 1 3ன் பிரகாரம் மாகாணசபை ஆலோசனை வழங்கலாம். ஜனாதிபதியே காணிப் பங்கிடு செய்யவோ-பராதீனப்படுத்தவோ முடியும். புறநடை 1-2 ன் பிரகாரம் மத்திய அரசு எவ்வித கட்டுப்பாடுமின்றி எந்த மாகாணத்திலுமுள்ள காணிகளை தனது தேவைகளுக்கு உபயோகிக்கலாம்.


இவை எல்லாவற்றிற்கும் மேலாக "தேசிய காணிக் கொள்கை" என்ற ஒரு கொள்கை இலங்கை அரசினுல் நியமிக்கப்படும் ஒரு ஆணைக்குழுவினுல் வகுக்கப்படும் இத்தேசியக் காணிக்கொள்கை என்ற கொள்கையின் சுற்றுவட்டத்திற்குள்ளேயே காணி சம்பந்தமான எந்த நடவடிக்கையையும் எம் மாகாணசபையும் வகுக்கலாம். ஆனுல் மாகாணசபைகள் இவ்விதம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் அவற்றிற்குக் காணி உரித்தில்லை. தங்கள் அதிகார வரம்புக்கு உட்பட்ட விடயங்கள் சம்பந்தமான காணிப் பங்கீடுகள் சம்பந்தமாக திட்டம் வகுத்து காணி வழங்கும்படி ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறலாமே தவிர காணியைப் பங்கீடு செய்யவோ-பராதீனப்படுத்தவோ அதிகாரமில்லை. சுருக்கமாகச் சொன்னுல் ஒரு மாகாணத்துக்கு அதன் எல்லைக்குள் அடங்கும் ஒரு அங்குல காணியைத் தானும் தன்னிஷ்டப்படி உபயோகப்படுத்தும் உரித்துக் கிடையாது.

(வளரும்)

அடுத்தவாரம்: பகுதி (III)

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 25



அனுப்புவோர் பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

ஒப்பம்: ..............................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல்வாரத்தில் வெளியாகும்.

**இடமிருந்து வலம்**

1. இந்திய சுதந்திரப் போரின்போது எழுப்பப்பட்ட சுலோகம்
5. வேகம்
7. சமயம்
9. கணவன்
10. மூன்று
11. ஏத்து
13. அறையின் நான்கு பக்கங்களிலும் உள்ளது
15. ரகம்
18. இணையானது என்பதைக்குறிப்பது
19. வாழ்த்து
21. கோடை காலத்தில் அடிக்கடி வருவது.
22. மேல்நாட்டுக் குடிவகை
23. சேவல்......

**மேலிருந்து கீழ்**

1. வரவேண்டியிருப்பது
2. உடம்பு
3. எரித்தல்
4. மன்மதன் காதலி
6. செய்தி
8. பயிர் செய்யப்படாத நிலம்
11. மனேநிடம்
12. உலகம்
14. சொற்கள் சேர்ந்தும் உருவாகுவது
16. பொன்
17. ஒளி வடிவு தலைகீழாய் நிற்கிறது
20. திவ்விய
21. பாய்தலைக் குறிப்பது

### சொற்சிலம்பம் இல. 23 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சேதுந்தனம் 5 கழி 6. கர்ப்பிணி 8. புரி 11 உரையாசிரியர் 14. சடை 15 மைல் 16. ஆமை 18. லயம் 19 குளியலறை 20 தாள்

**மேலிருந்து கீழ்**

1 சேவகர் 2 டனிப்புரை 3. தரணி 4. ம்கதா 7. பிரியாமை 9 தெரி 10. கூர்மை 11 உடை 12 சில்வறை 13 யஆம்தா 14. சருகு 17. சய

### வெற்றி பெற்றவர்கள் விவரம்

சொற்சிலம்பம் இல 23

முதலாம் பரிசு: சு. துஷ்யந்தன் 'வசந்த வாசா' பத்தாவத்தை, இளவாலை.

இரண்டாம் பரிசு: திருமதி பா. குமாரசாமி மாதலை, பருத்தித்துறை

மூன்றும் பரிசு: க. பாஸ்கரன் பொலீஸ் நிலையவீதி, சாவகச்சேரி.

✱ பரிசுக்குரிய பணத்தைப் பெறுவதற்கு, கடிதம் கிடைத்த பின்னர் பரிசு பெற்றவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில் வர வேண்டும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"ஆரோக்கியமான குடும்பம்
ஆனந்தமான குடும்பம்"

மில்க்வைற் மெடிக்கேட்டட் சோப் புதிய விலை 2 ரூபா 50 சதம் மட்டுமே! 10 மேலுறைகளை அனுப்பி ஒரு அழகிய கைலேஞ்சியை பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

'மில்க்வைற்' - யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

19 - 07 - 1986 சனிக்கிழமை




நெடுங்கேணிப் பயங்கரம்

# பல் விழுந்த வாய் போல ஷெல் விழுந்த பஸ்ஸின் கோலம்

முல்லைத்தீவு பஸ் நிலையம் தனது விடியல் பொழுதின் சோம்பலை முறித்துக் கொள்கிறது.

அந்த பஸ்நிலையத்தின் சந்தோஷம் எங்கோ பரதேசம் போய்விட்டது போல் நிலைமை.

வவுனியா செல்லும் பஸ் நின்ற இடத்தை நோக்கி நான் எனது நடையை துரிதப்படுத்துகிறேன். இருப்பதற்கு இடம் பிடிக்கும் அவசரம்.

வவுனியா பஸ்ஸில் எனது காலை வைக்கிறேன்.

என்மனம் ஏனோ அடித்துக் கொள்கிறது

இன்று 17ம் திகதி.

நம்பர் 8

எனக்கும் எட்டு ஏனோ பொருந்துவதில்லை —

இவ்வாறு நெடுங்கேணிப் பயங்கரத்தில் சிக்கி காயமுற்ற யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சட்டத்தரணி திரு. கனகமனோகரன் விவரித்தார். சம்பவத்தை அவர்

## ஒரு பயணியின் அனுபவம்

கோவைப்படுத்திச் சொல்கிறார்:

சாரதிக்குப் பின்னால் 3 ஆவது இருக்கையில் ஒரு ஸீற். வெறுமையாக — அங்கே சென்று அமர்கிறேன்.

மேலும் பல பயணிகள் வந்து ஏறுகிறார்கள் பலர் நின்று கொண்டே இருக்கிறார்கள்.

பஸ் எஞ்சின் வேலை செய்தபடியே இருக்கிறது. சாரதியைக் காணவில்லை.

"சும்மா பஸ் நிக்கேக்கையும் எஞ்சினை வேலை செய்ய விட்டால் சி. ரி. பி. நட்டத்திலை ஓடாமல் என்ன செய்யும்?"... எனக்குப் பக்கத்திலிருந்தவர் என்னைப் பார்த்துக் கேட்கிறார்.

"அது...பஸ் நிற்பாட்டினால் திருப்பி ஸ்ராட் பண்ண ஏலாதாம்... தள்ளித்தான் வெளிக்கிடுத்த வேணும்.. வழியிலை என்ன கரைச்சல் கொடுக்குதோ"... முன்சீற்றில் இருந்தவர் அலுத்துக் கொள்கிறார்.

அவர் சொல்வது போல் நிச்சயம் வழியில் இந்த எஞ்சினால் பிரச்சினை வரும் என்று அவர் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்.

சாரதி பஸ்ஸினுள் ஏறி ஒருமுறை சுற்றிப் பார்க்கிறார்.

எனக்கு முன்பே பழக்கமானவர்தான். நான் ஒரு வழக்கறிஞன் என்ற ரீதியில் அவருக்கு அறிமுகமாயிருந்தேன்.

சாரதி தனக்கு பின்னே உள்ள ஸீற்றைக் காட்டி "ஐயா வந்து இதிலை இருங்கோ; ஒரு பாக் தான் இருக்கு... ஒராள் தான் புக் பண்ணி இருக்கு ... நீங்களும் இருக்கலாம்... வாங்கோ..."

நானும் அவநம்பிக்கையுடன் எதற்கும் முன் எச்சரிக்கையாக—

பையை எனது பஸ் சீற்றில் வைத்துவிட்டு, முன் சீற்றில் சென்று அமர்கிறேன்.

இரண்டு முஸ்லீம் இளைஞர்கள் வந்து ஏறுகிறார்கள்' நான் இருந்த சீற்றைப் பார்த்து தமக்குள் கதைக்கிறார்கள்.

"நாங்கள் முழுசீற்றுக்கும் தான் புக் பண்ணினனாங்கள்..

விடயத்தை புரிந்து கொண்டவனாக எழுந்து எனது பழைய ஸீற்றுக்குச் செல்கிறேன்.

இந்த இடம் மாற்றம் தான் என்வாழ்க்கைத் தடம் மாற்றப் போகிறது என்பதை நான் அப்போது நினைக்கவில்லை.

6 00 மணி.

பஸ் புறப்படுகிறது. முன்சீற்றை எட்டிப் பார்க்கிறேன். அங்கே என்னோடு பிரச்சினைப் பட்ட அந்த இரு இளைஞர்களுக்கும் இடையில் ஒரு இளம் பெண் இருக்கிறார்.

பஸ்ஸின் தாலாட்டில் இந்தப் பயணம்தான் தமது இறுதிப்பயணம் என்று புரியாத பலர் சுகமாக தூங்குகிறார்கள்.

நேரம் 7-15

17 மைல் பிரயாணத்தின் பின் தாண்டுவான் ஊரை அடைந்த பஸ் திடீரென நிற்கிறது

பஸ்ஸைச் சுற்றி ஊர் மக்கள் சிலர் குவிகிறார்கள்.

ஏதோ பிரச்சினை போலும், எனது ஸீற்றை விட்டு எழுந்து நிற்கிறேன்.

முன் கண்ணாடி வழியாக என்னைப்பார்த்த சாரதி 'நெடுங்கேணியில் ஏதோ ஆமிப்பிரச்சினையாம்...'

ஆமி என்ற சொல்லைக் கேட்டதும் பஸ் சலசலக்கத் தொடங்கியது.

'என்னவாம்...?' பலரின் குரல்.

'நீங்கள் திரும்பிப் போறது நல்லம்... ஊர் இளைஞன் ஒருவன் எம்மைப் பார்த்துக் கூறுகிறான்

'நெடுங்கேணியிலிருந்து ஏதும் வாகனம் வந்தால் விசாரித்துப் பார்த்துச் செய்வம்'. சாரதி

அப்போது நெடுங்கேணிப் பக்கமிருந்து வேட்டுச் சத்தங்கள் கேட்கின்றன.

பலரின் முகத்திலும் பயப் பிராந்தி

'சும்மா நிண்டு மினக்கெடாமல் கெதியாய் திரும்பி முல்லைத்தீவுக்குப் போங்கோ...' அதே ஊர் இளைஞன் எம்மை நிர்ப்பந்திக்கின்றான்

'தம்பி கொஞ்சம் பொறும். பார்த்துச் செய்வம்...' சாரதி.

மூன்று மணி நேரமாக துப்பாக்கிச் சத்தங்களின் மத்தியில் பொறுத்திருக்கிறோம்.

எம் பஸ்ஸின் பின்னே பல வாகனங்களும் வந்து நிற்கின்றன

சாரதி இறங்கிச் செல்கிறார்.

எமது பஸ்ஸின் எஞ்ஜின் நிறுத்தப்படவில்லை.

அது நின்றால் மீண்டும் தள்ளித்தான் இயங்க வைக்கவேண்டும்.

நெடுங்கேணிப் பக்கமிருந்து ஐந்தாறு இளைஞர்கள் ஓடி வருகிறார்கள். வந்தவர்களில் ஒருவன் 'ஆமி இந்தப் பக்கமாக வாறாங்கள். நீங்கள் திரும்பிப்போங்கோ'

எம்மைத் திரும்பும்படி நிர்ப்பந்தித்துக்கொண்ட அந்த ஊர் இளைஞன் உடனே ஏதோ உணர்வில் உந்தப்பட்டவனாகச் சாரதியின் இருக்கையில் அமர்ந்து பஸ்ஸைத் திருப்புகிறான்

'தம்பி பஸ் நின்றால் திரும்ப ஸ்டார்ட் பண்ணேலாது. நீர் எழும்பும்' சாரதி கத்தியபடியே பஸ்ஸினுள் ஏறுகிறார்.

சாரதி தனது ஸீற்றில் அமர்ந்து பஸ்ஸை முல்லைத்தீவு நோக்கி திருப்பி ஓட்டலானார்.

உயிரைக் கையில் பிடித்துக் கொள்ளும் உணர்வில் ஸீற்றை இறுக்கிப் பிடித்துக் கொண்டேன்.

அரை மைல் தூரம் பஸ் சென்றிருக்கும்.

கறுத்தப் பருந்துபோல் ஒரு ஹெலி எம்மை நெருங்கி வந்தது.

பயங்கரமான சூழ்நிலையை எம்மிடம் விதைத்துவிட்டு எம்மை தாண்டிச் சென்றது

சென்றது; வானிலே நின்றது; திரும்பி எம்மை நோக்கி வந்தது.

எம்மை நோக்கி வந்த அப்பருந்து - மிச்சமிருந்த துணிவையும் எடுத்துக்

இவ்வார சம்பவம்

கொண்டு, எச்சமிட்டுச் சென்றது.

பேரிடி போல் ஓசை. என்ன நடந்தது என்று எதுவுமே புரியவில்லை

பஸ்ஸினுள் ஒரே புகை மயம். அதையும் மீறி மரண ஓலங்கள். இறங்குவதற்கு முண்டியடிக்கும் சனம்.

புகையூடு கண்ணைத் திறந்து பார்க்கிறேன். திறந்தவன் பேயறைந்தவன் போலானேன்.

என் உடலெங்கும் இரத்தம். துடைத்துப் பார்க்கிறேன்.

மனித மூளையின் சிதைவுகள்.

குனிந்து பார்க்கிறேன். காலடியில் மூளை சிதறிய ஒருவரின் உடல்.

அவரின் காலருகே ஒரு வயதுபோன மூதாட்டி என்னையே வெறித்துப் பார்த்தபடி பிணமாக...

எழும்பி முன்னே பிணங்களைத் தாண்டி விரைகிறேன்.

சாரதியின் ஸீற்றுக்குப் பின் ஸீற்றில் இருந்தவர்கள்-என்னோடு பிரச்சினைப்பட்டு, என்னைப் பின்ஸீற்றுக்கு அனுப்பியவர்கள்......

அதனால் எனது உயிரை காத்தவர்கள் சிதறிய நிலையில் கீழே உருக்குலைந்து கிடக்கிறார்கள்.

நடுவே இறந்த இளம் பெண் இரு கைகளையும் சீற்றில் போட்டபடி தூங்குவதுபோல் பிணமாகக் கிடக்கிறாள்.

சாரதியை பார்க்கிறேன்.

கழுத்தில் இரத்தம் வெருகடஸ் ஸ்டியரிங்கில் படுத்துக் கிடக்கிறார்.

அசைத்துப் பார்க்கிறேன் உடல் பிணமாகத் தெரிகிறது

இதற்குள் தப்பிய பயணிகளும் பஸ்ஸை விட்டு இறங்கி விட்டார்கள்

இறங்க எத்தனிக்கிறேன். பஸ் ஒரு பக்கம் சாய்வாக நிற்கிறது

பஸ்ஸின் கூரை வழி வந்த குண்டு சாரதியின் அருகே விழுந்ததால் சாரதி உடனே இறந்திருக்கிறார்.

பஸ் ஒரு மதகுடன் மோதி சரிந்து நிற்கிறது.

கீழே இறங்குகிறேன்.

"அண்ணை எனது அக்காவைத் தூக்கித் தாருங்கோ...." ஒரு குழந்தையை கையில் ஏந்தியபடி ஒரு பெண் நிற்கிறாள்.

உடனே உள்ளே பாய்ந்து ஏறி அவளின் தமக்கையைத் தூக்கியபடி வெளியே வருகிறேன்.

"அக்காவின்ரை குழந்தை...." மீண்டும் அதே பெண்.

பஸ்ஸினுள்ளே கதறியபடி இருந்த சிறு பெண் குழந்தையை தூக்கினேன்.

"தண்ணீர் தண்ணீர்...."

குரல் வந்த திக்கை நோக்கினேன்.

காற்சட்டை அணிந்த ஒரு இளைஞன் முனங்கியபடி ஸீற்றிலே இருந்தான்.

எனது ஸீற்றில் இருந்த தண்ணீர் 'கானை' எடுத்து தண்ணீரைக் குடிக்கக் கொடுத்தேன்.

கீழே இறங்கிப் பார்த்தேன். ஊர் மக்கள் சிலர் பஸ்ஸை நெருங்கி வந்தனர்.

காயம்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக வாகனம் தரும்படி கேட்கிறேன்.

தாண்டுவானில் எம்மோடு பிரச்சினைப்பட்ட இளைஞன் ஒரு டிரக்டரோடு வந்தான்.

அதிலே காயப்பட்டவர்களையும் ஏற்றினோம்.

எமது கெட்டகாலம் போலும் டிரக்டர் இயங்க மறுக்கிறது.

இதற்குள் வேறு ஒரு டிரக்டர் வருகிறது; இந்தப் பெட்டியை அதில் இணைத்து காயப்பட்ட 8 பேரையும் முல்லைத்தீவு நோக்கி கொண்டு செல்கிறோம்.

அக்கா!!! என்றொரு ஓலம். திரும்பிப் பார்க்கிறேன்.

நான் காப்பாற்றிய கைக்குழந்தையின் தாய் இறந்துபோனாள் தங்கை ஒப்பாரி வைக்கிறாள்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியை வந்து அடைகிறோம்.

நடந்தவற்றைக் கூறி பஸ்ஸில் இருக்கும் பிணங்களை எடுத்து வரும்படி கேட்கிறோம்.

அங்கு கடமைபுரியும் சிற்றூழியர் ஒருவருடன் ஒரு இ. போ. ச. பஸ்ஸில் மீண்டும் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைகிறேன்.

அங்கே நான் வந்த பஸ் 'எமன்' அப்படியே நிற்கிறது.

உள்ளே ஏறுகிறோம் எனக்கு உயிர்ப்பிச்சை அளித்த அந்த முன்சீற் முஸ்லீம் இளைஞர்கள் இருவரையும் நன்றியுடன் பார்க்கிறேன்.

"அம்மா!...நீயா?" கதறலைக்கேட்டு திரும்பிப் பார்க்கிறேன்.

என்னோடு கூட வந்த ஆஸ்பத்திரி சிற்றூழியர் ஒரு வயது போன பெண்மணியின் பிணத்தைக் கட்டிப் பிடித்து அழுகிறார்.

ஏதும்புரியாது அருகே செல்கிறேன்.

"ஐயா, என்னுடைய அம்மாவைப் பார்த்தீர்களா..."

"அம்மா .. உன்னுடைய பிரேதத்தை எடுக்கவா நான் வந்தேன்" சிற்றூழியர் கதறுகிறார்.

எங்களுடன் வந்தவரை விசாரிக்கிறேன்.

அவரது தாய் ஓர் ஓய்வு பெற்ற தாதி. தமது ஓய்வூதியப் பணத்தைப் பெறுவதற்காக வவுனியா சென்றவர் நிரந்தர ஓய்வைப் பெற்றுவிட்டார்.

பிணங்களை எடுக்க வந்த ஆஸ்பத்திரி ஊழியர் தனது தாயின் பிணத்தையே எடுக்கும் எதிர்பாராத நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்.

இவைகள் எதையும் பொருட்படுத்தாது பல் விழுந்த வாய் போல ஷெல் விழுந்த பஸ் பேசாது நிற்கிறது.

தூரத்தே மீண்டும் ஹெலியின் சத்தம் கேட்கிறது. நான் இப்போது பயப்படவில்லை... ★

கேட்டு எழுதியவர்:-
எஸ். ஜே. பி. ரட்ணதுரை

# கொழும்பில் தலைவர்கள் பேச்சு; தமிழர் தாயகத்தில் துப்பாக்கிகள் பேச்சு

கொழும்பில் தலைவர்கள் பேசுகின்றனர்; தமிழர் தாயகத்தில் துப்பாக்கிகள் பேசுகின்றன.

கொழும்புப் பேச்சுகளின் முடிவு இன்னும் தெரியவில்லை.

ஆனால் துப்பாக்கிகள் பேசுவதின் முடிவு உடனுக்குடன் தெரிந்து விடுகின்றன

பேச வந்து கொழும்பில் தங்கியுள்ள கூட்டணிச் செயலதிபரே கூறிவிட்டார்.

பேச்சுக்கள் தொடங்கிய பின்னர் 150க்கு அதிகமான தமிழ் மக்கள் படையினரால் கொல்லப்பட்டு விட்டனர் — இப்படி திரு. அ. அமிர்தலிங்கம் உலக செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்குத் தெரிவித்து இருக்கின்றார்.

படுகொலையின் மத்தியிலும் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன

ஆயுதப்படைகளின் சுப்ரீம் கமாண்டர் ஜனாதிபதி ஜெயவர்த்தன சொல்லி விட்டார்.

அப்படி என்ன சொல்லி விட்டார்? "கோழியைக் கேட்டு ஆணம் காய்ச்சப் போவதாக"—

உள்ளும் புறமும் — குறுமுனி

(மன்னிக்கவும்) "அப்பாவித் தமிழர் கொல்லப்படுவது குறித்து இராணுவ அதிகாரிகளுடன் விவாதிக்கப் போவதாக" — இப்படித்தான் சுப்ரீம் கமாண்டர் கூறியிருக்கிறார்.

மூதூர் அகதி முகாமில் உள்ளவர்கள் மீது சூடு! 67 பேர் பலி!!

அடம்பன் குடியிருப்புப் பகுதியில் விமானத் தாக்குதல்: 47 பேர் பலி!

நெடுங்கேணியில் பயணிகளுடன் வந்து கொண்டு இருந்த பஸ் மீது வானத்தில் இருந்து குண்டு வீச்சு: 15 பேர் பலி!

பேச்சுக்கள் தொடங்கிய பின்னர் நடந்த பயங்கரங்கள் இவை.

நூற்றுக்கணக்கான தமிழர்கள் அர்ப்பணமாகிக் கொண்டு இருக்கின்றனர்.

### ஜாலியன்வாலா எந்த மூலைக்கு?

வியட்நாமில் நடந்த மைலாய் படுகொலை, இந்தியாவில் இடம்பெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலை எல்லாம் எந்த மூலைக்கு என்ற விதத்தில் தமிழர் தாயகத்தில் படுகொலைகள் இடம்பெறுகின்றன.

பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்றால் யுத்த நிறுத்தம் வேண்டும்; அப்பாவித் தமிழர் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும் — இப்படி எல்லாம் வலியுறுத்திய இந்தியா, மௌனஞ் சாதிக்கிறது.

நீண்ட இடைவெளியின் பின்னர் பேச்சுக்களை நடத்த கொழும்பு வந்துள்ள சமயத்தில் இந்தப் பயங்கரப் படுகொலைகள் ஏன் இடம் பெறுகின்றன?

பலதரப்பட்ட கருத்துக்கள் இது சம்பந்தமாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றன.

தமிழர் தாயகத்தின் மீது துப்பாக்கியை நீட்டிக் கொண்டு. தீர்வு ஒன்றை கூட்டணித் தலைவர்கள் மீது திணிக்கும் முயற்சியா இது?

கூட்டணியுடன் பேசினாலும் தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதை நிறுத்தவில்லை என்று சிங்கள மக்களுக்குக் காட்டவா இந்த இராணுவ நடவடிக்கை? (ஏனெனில் தமிழ் பொதுமக்களைக் கொன்று விட்டுத் தீவிரவாதிகளைக் கொன்றதாகத் தானே அரசு கூறுவது வழக்கம்.)

தீர்வு ஒன்று வந்து விடப் போகிறதே என்ற அச்ச உணர்வு காரணமாக இப்படு கொலைகள் மூலம் பேச்சுக்களை முறித்துக் கொண்டு கூட்டணியினரை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் திரு. ஜெயவர்த்தனவுக்கு எதிரான சக்திகள் ஈடுபட்டுள்ளனவா?

இந்தச் சந்தேகங்கள் எல்லாம் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அலசப்படுகின்றன.

இனப்பிரச்சினைத் தீர்வு இறுதிக் கட்டத்துக்கு வந்து விட்டது—

அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடக்கத்தான் செய்யும்—

அநியாயங்கள் அதிகரித்தாலும் இறுதிக் கட்டப் பேச்சுக்களை முடித்துக் கொண்டுதான் கூட்டணியினர் கொழும்பில் இருந்து புறப்படுவர்—

இப்படி கொழும்பில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

படுகொலைகள் மத்தியிலும் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணுவதில் மிதவாதத் தமிழத் தலைவர்கள் உறுதியாக நிற்கிறார்கள் என்பதை உலகம் உணர்ந்து கொள்ளச் செய்யலாம் என்ற அபிப்பிராயம் கூட்டணி வட்டாரங்களில் நிலவுகிறதாம். ☆

# தண்ணீர் தண்ணீரா? கண்ணீர் கண்ணீரா?

"தண்ணீர், தண்ணீர்" கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தியத் திரைப்பட விழாவில் திரையிடப்பட விருக்கும் தமிழ்ப் படத்தின் பெயர்.

இவ்விழா சம்பந்தமாக கொழும்பில் இந்தியத் தூதரகம் கடந்த வியாழன் மாலை வைபவம் ஒன்றை நடத்தியது.

சிங்களத் திரைப்பட நடிகர், நடிகைகள் கலந்து கொண்டனர்.

நடுநாயகமாக விளங்கினார் அரசியல் துறையிலும் அண்மைக்காலமாகப் பிரகாசித்து வரும் நடிகர் விஜயகுமாரணதுங்க சூழ்ந்து கொண்ட செய்தியாளர்களிடம் அப்பாவித் தமிழர் கொல்லப்படுவது குறித்து அழாக்குறையாகக் கவலை தெரிவித்துக் கொண்டாராம் அவர்.

மூதூரில் அகதிகள் தொகையாகக் கொல்லப்பட்டனர் என்ற செய்திதான் அந்த நிகழ்ச்சியில் எல்லோர் வாய்களிலும் அடிபட்டது.

கவலைப் பட்டுத்தான் என்ன பலன்?

தமிழனின் 'கண்ணீர், கண்ணீர்' என்ற தலைப்பில் படம் ஒன்றை எடுத்தாலாவது பயன் படுமே!

### தமிழருக்கு.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யை மத்திய அரசே வகுக்கும் மாகாண சபைகளின் கருத்துக்களையும் அதற்கு முன்னர் மத்திய அரசு பரிசீலனை செய்யும்'—என்று சிபாரிசு செய்துள்ளது

தமிழை உத்தியோக மொழியாக்கும் திட்டத்தை இலங்கை மக்கள் கட்சி எதிர்த்தது.

மீண்டும் இம்மாதம் 23ஆம் திகதி அரசியல் கட்சிகள் மாநாடு நடைபெறும் என்றும் -

அப்போது தீர்மானம் எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டது. (உ-எ)

### வர்த்தகர் சங்க பொதுச்சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ் வர்த்தகர் சங்கப் பொதுச்சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பாரதி ஷா வித்தியாலயத்தில் நடைபெறும்.

திரு. என். முருகேசுவின் ஸ்தாபனத்திற்கு லொறியில் கொண்டு வரப்பட்ட பொருள்கள் சூறையாடப்பட்டது, வேறு போக்குவரத்துச் சேவையாளர்களுக்கு நடைபெற்ற சம்பவங்கள் ஆகியவை குறித்து மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசிப்பதற்காக இக்கூட்டம் நடத்தப்படுகிறது.

## நியூ விக்ரேஸ்

எம்மை வளர்த்த வாடிக்கையாளர்களுக்காக

## ஓர் விலை குறைப்பு

| | |
|---|---|
| ஓடியோ | றெக்கோடிங் |
| வீடியோ | றெக்கோடிங் |
| கமரு | றெக்கோடிங் |
| வீடியோ | கிளப் |
| ஓடியோ | கிளப் |

இத்தனை சேவைகளையும் வடமாகாணத்தில் மக்கள் மத்தியில் அறிமுகமாக்கிய முதல் ஸ்தாபனம், (ஒரே ஸ்தாபனம்;

## நியூ விக்ரேஸ்

எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

இன்று தொடக்கம் வீடியோ பட றெக்கோடிங் 50/- ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

We wait to Welcome you

## Hotel Gnanam's

A/C or NON A/C ROOMS
50/- to 200/-

CHINESE MEALS
25/- to 40/-

ALSO
COOL DRINKS,
HOT DRINKS.
SHORTEATS & LUNCH

UNDER NEW MANAGEMENT

Assuring you of our personal attention and our very best Services Always.

Open from 9 30 a m to 11 30 p.m

Tele: 22082, 23067

நீத்தார் பட்டியல்

### ந. தம்பிப்பிள்ளை

கிளிநொச்சி லோகன்ஸ் உரிமையாளர் ந. தம்பிப்பிள்ளை அகால மரணமானார். அன்னார் திரு—திருமதி நல்லித்தம்பியின் அன்பு மகனும் நாகம்மாவின் கணவரும் லோகநாதனின் அன்புத் தந்தையும் பொன்னம்மா, காமாட்சி, சுப்பிரமணியம், செல்லம்மா ஆகியோரின் சகோதரரும் செல்லத்துரை, பூரணம் ஆகியோரின் அன்பு மருமகனும், சங்கரப்பிள்ளை, நடராசா, செல்லம்மா, பதசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் ஈமக்கிரிகைகள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர் சாம்பலோடை மயானத்தில நடைபெறும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்ட திகதி 19—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org